திலகத்திய மிருகம்

சுஜாதா

இலக்கிய விருந்து

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்

கலைஞர்

கஸ்தூரி பதிப்பகம்

'இராஜ இல்லம்'

1311—13வது பிரதான சாலை,

அண்ணாநகர் சென்னை-40

முதற்பதிப்பு. செப். 1985.

விலை. ரூ. 4.00

தஞ்சை மாவட்டம் மன்னர்குடி இலக்கிய வட்டத்தின் மூன்றுவது ஆண்டு விழா 18-8-1985 அன்று மன்னர்குடியில் திரு. ஆர். எஸ். கோபாலன் தலைமையில் நடைபெற்றது. வடுவூர் திரு நாராயணன் வரவேற்புரையாற்றினர். திரு. நடனம் அறிக்கை யினைப் படித்தளித்தார். திரு. ஹரேஷ் நன்றி கூறினர். முன்னுள் அமைச்சர் மன்னை ப. நாராயணசாமி அவர் களும் மற்றும் பலரும் திரளாக விழாவில் கலந்து கொண்டனர்.

தலைவர் கலைஞர் அவர்கள் விழாவில் 'இலக்கிய விருந்து' என்கிற தலைப்பில் ஆற்றிய உரை இது.

அச்சிட்டோர் :

தமிழோசை அச்சகம்
84, அபிபுல்லா சாலை,
தியாகராய நகர்,
சென்னை-600017.

பதிப்புரை

சூரியனைச் சுற்றியே கோள்கள் சுழன்று கொண்டிருப்பதைப் போல, இன்று தமிழகத்தின் அரசியல்-சமுதாயம்-இலக்கியம் ஆகிய முக்கியத் துறைகள் அனைத்தும் தலைவர் கலைஞர் அவர்களை மையமாகக் கொண்டே வலம் வருகின்றன.

தமிழகத்தின் இனமானம் காக்கப்படுவதற்கும் ஜனநாயகம் நிலைப்பதற்கும் அறிஞர் அண்ணா அவர்களைப் பின்தொடர்ந்து தொண்டாற்றும் தலைவர் கலைஞர் அவர்களின் ஆற்றலும் கருத்துக்களும்—அவைகளை அவர் வெளிப்படுத்தும் வேகமும் தமிழ்க் குலத்துக்கு அரணாக நிற்கின்றன.

கடலினும் பரந்ததும் ஆழமானதுமான தமிழ் இலக்கியம், கலைஞரின் ஆற்றலாலும், பாமர மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் எடுத்துச் சொல்லும் எழுத்துத் திறனாலும் இன்று புதிய பொலிவுகளைப் பெற்று வருகிறது.

கலைஞர் அவர்களின் இலக்கியத் தொண்டின் தொடர்பாக கடந்த 18-8-85 அன்று மன்னார்குடி இலக்கிய வட்டத்தின் ஆண்டு விழாக் கூட்டத்தில் - "இலக்கிய விருந்து" என்கிற தலைப்பில் கலைஞர் அவர்கள் ஆற்றிய ஒன்றரை மணி நேர இலக்கியப் பேருரையை இந்நூல் வடிவில் வெளியிடும் பேறு கஸ்தூரி பதிப்பகத்திற்குக் கிடைத்திருக்கிறது.

மாணவப் பருவத்தையும் கடக்காத எனக்கு—கலைஞர் அவர்களின் பாதந்தொட்டு பணிபுரிய புறப்பட்டுள்ள எனக்கு—இந்நூலை முதன்முதலாக வெளியிடுகின்ற அனுமதியை தலைவர் அவர்கள் வழங்கியது என்னிடம் அவர் கொண்டுள்ள அன்பு மட்டுமல்ல; இளைஞர்களை ஊக்குவிப்பதில் அவருக்கு இயல்பாகவே அமைந்துள்ள போற்றத்தக்க பண்பிற்கு ஒரு உதாரணமாகும்.

தலைவர் அவர்களின் நூல்களை வெளியிட அனுமதி கிடைக்குமா என்று எத்தனையோ பதிப்பகங்கள் காத்திருக்கும்போது இந்தத் துறையில் அனுபவமே இல்லாத எனக்கு அந்த வாய்ப்பினை அளித்த தலைவர் அவர்களின் பாதங்களுக்கு மீண்டுமொருமுறை என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு, இந்நூலினை துரிதமாக வெளியிட உதவிய தமிழோசை அச்சகத்தாருக்கும், ஓவியர் வசந்த் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கலைஞர் அவர்களின் எழுத்துக்களையும் சொற்பொழிவுகளையும் கற்கண்டெனச் சுவைத்து மகிழும் தமிழர்கள் இந்த நூலையும் தங்கள் இலக்கிய பசிக்குச் சரியான விருந்தெனக் கொண்டு மகிழ்வர் என்பது உறுதி.

அன்புள்ள,

நாஞ்சில் இரா. கென்னடி,

கஸ்தூரி பதிப்பகம்.

பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18
முன்னா அறிவாலயம்

மன்னை இலக்கிய வட்ட விழாவில் வடுவூர் நாராயணன் வரவேற்புரை

செயலர் என்ற முறையில் இலக்கிய வட்ட கூட்டங் களுக்கு வருகின்ற எழுத்தாளர்களையெல்லாம் ஒரு எழுத் தாளனுக இருப்பதால் அறிமுகம் செய்து வைப்பதே இதுகாறும் எனது பணி. ஆனல் இந்தக் கூட்டத்தின் சிறப்பு, பணியை இடம் மாற்றி, கலைஞரை வரவேற்க வாயிலுக்கே கொணர்ந்து வைப்பதில் எனக்கு மிகவும் மகிழ்ச்சியே!

இந்த பூமியின் மீது ஓர் பூ விழுவதால் புவியின் உடம்பு புண்ணுகிவிடுவதில்லை. இலக்கிய பூமியில் கலைஞர் அரும்பிக் கொண்டிருக்கும் ஒரு வாசமுள்ள மலர். அரும்பே மணம் வீசுவதை நன்கே அறிகிறேரும்.

அவருடைய ஒரு முகம் எல்லோருக்கும் தெரிந்த முகம்! அதே முகத்தின் மறுபாதி ஒரு இலக்கியவாதியின் முகமாக, பலர் பார்த்திருந்தாலும், பூரணமாக பார்த் திராத அந்த இன் முகத்தை, தமிழ் கொஞ்சும் முகத்தை, சொற்கள் மிஞ்சும் கோவைகளை இங்கே, இலக்கிய வட்டம் அறிமுகப்படுத்துகிறது.

தேனை மறந்த வண்டும், ஒளிச் சிறப்பை மறந்து விட்ட மலரும், வானை மறந்த பயிரும் ஒருக்கால் இருக்க இயலுமோ என்னவோ! ஆனல் தமிழ் உள்ளளவும், கலைஞரின் அழகு தமிழ் அமிழ்தினும் இனிதாக இலக்கிய வீதியில் நடனமாடும்.

சேரனுல் கண்ணகிக்கு வெறும் ஓவியம் மட்டும் படைக்க முடிந்தது, இளங்கோ அடிகளோ காவியத்தை படைத்திட்டார். நம் கலைஞர் குறளோவியத்தில் காவியத்

தையும் ஓவியத்தையும் கலந்து, குழைத்து, தங்கமலரில் பதித்து, இனிமை மணம் சேர்த்து, தென்றலில் தவழும் தமிழாக உலாவவிட்டிருப்பதை தமிழகம் மறக்க இயலுமோ?

சிறையில் பூத்த சின்ன மலராக இருப்பினும், நெஞ் சுக்கு நீதி கேட்கும் நேரங்களில் தமிழுக்கு தழல் பூசி சீறும் சிங்கமாக மாறும் கலைஞர், இலக்கிய வட்டத்திற் குள் வந்ததும், தழல் குறைந்து, தன்மை சேர்ந்து கலைஞரின் கவிஞுகை மாறப்போகும் விந்தையை பார்க் கத்தானே போகிறோம்.

எளிய சொற்கள், ஆனல் நம் நெஞ்சில் தொட்டுப் பார்க்கும் நினைவுகளை தூண்டும் வரிகள் இவை.

"இரவென்னும் இமைப் பேழையினைத் திறந்துகொண்டு
வெள்ளை விழிப்பகல் மெல்ல எட்டிப்பார்த்தது!"

விடிவெள்ளி நேரத்தை எளிய உவமையுடன் இயற்கையாகவே வர்ணிப்பதில் இங்கு கலைஞர் Wordsworth-தையும் மிஞ்சுகிறார்.

கலைஞரே! ஓர் ஒப்பு உயர்வில்லாத சிறந்த இலக்கிய வாதியாக மெல்ல மலர்ந்து வரும் உங்களை வரவேற்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

வணக்கம்.

R. S. கோபாலன் தலைமையுரை

இலக்கியத் துறையில் முடிசூடா மன்னா!
இலக்கிய வட்டத்து ஈராயிரம் இதயங்களே!
இவ்விலக்கிய வட்டத்தலைவரின் இனிய மாலை வணக்கங்கள்!

எனக்கு பத்து நிமிடங்களில் வங்கக்கடலை ஒரு குதிரை சக்தியுள்ள இறவை இயந்திரத்தினுல் இறைக்க கட்டளையிட்டுள்ளார்கள். எனவே நீரை ஆவியாக்கி சில துளி மழைபோல் செயல்பட உள்ளேன்.

கலைஞர் பேச்சில் வல்லவர்; எதிரிகளின் வாயை அடக்கும் ஆற்றல் உள்ளவர். அடுக்கடுக்காக சொற் களைப் பயன்படுத்துபவர். உவமைகள் இயல்பாக வந்து குதித்திடும். தெளிவாகப் பேசுவார். எதிரிகள்கூட செவி சாய்த்து அவருடைய பேச்சை கேட்டு மகிழ்ச்சி யடைவார்கள். தங்களை எதிர்த்துப் பேசுகிருரே என்பதை மறந்து போவார்கள். தனித்தமிழில்தான் பேச வேண்டும் என்ற கட்டுப்பாடு அவரிடம் இல்லை. கேட்போர் தெளி வாக தாம் சொல்வதைப் புரிந்து கொள்ள வேண்டும் என்பது அவரின் நோக்கம். தமிழ் இலக்கியங்களை நன்ருகப் படித்தவர். சங்க நூல்களை பொருள் அறிந்து இன்புறுவார். தமிழகத்தின் பெருமையை அவை எவ் வாறு காட்டுகின்றன என்று வியப்படைவார்.

கலைஞரின் பேச்சில் சுவை துள்ளிவரும். வீரம் ததும்பும். இடையிடையே நகைச்சுவை தலைக்காட்டும். அழுத்தமாகச் சொல்ல வேண்டியதை பலமுறை அழுத்திச் சொல்வார். சொற்பொழிவுக் கலை அவருக்கு கைவந்தது. மாணவர்கள் அவர் பேச்சில் மயங்கி போவார்கள். பேச்சுக் கலைக்கு ஓர் உதாரணம் வேண்டு

மானுல், அவருடைய பேச்சை மாதிரியாக எடுத்துக் கொள்ளலாம். அதற்கென்று ஒரு தனித்தன்மை உண்டு. வெளியூர்களுக்குப் போனுல் அவரை வரவேற்பதற்கு ஏராளமான மக்கள் கூடுவார்கள். அவருடைய பேச்சைக் கேட்டால் இனிய இசையைக் கேட்பது போல இருக்கும். அதனுல்தான் அதைக் கேட்போர் மயங்கிப் போகிறார்கள்.

கலைஞர் முதல்வராக இருந்தபோது திருக்குவளை கோவில் வரவேற்பில் அர்ச்சகர் கலைஞர் அவர்களுக்கு பட்டு பரிவட்டம் கட்டி மரியாதை செய்கின்ற நேரத்தில் கலைஞர் கண் கலங்கினர், நா தழுதழுத்தது. காரணம் புரியாது தவித்தனர். பிறகு பள்ளிக்கூடத்திற்கு அடிக்கல் நாட்டிப் பேசும் போது கலைஞர் அவர்கள் கோவிலில் ஏற்பட்ட மனச்சஞ்சலத்தைக் குறிப்பிட்டு எனக்கு பட்டு பரிவட்டம்சூட்டி மரியாதை செய்த அர்ச்சகர் இதே ஊரில் என்னுடைய இளமைக் காலங்களில் உற்ற தோழராய் இருந்து பல வருடம் பழகி இதே திருக்கோவிலில் மேல் மண்டபம் வரை ஏறி விளையாடி மகிழ்ச்சி பொங்க இணை யாக இருந்தவர். எனக்கு செய்த மரியாதையை ஏற்றுக் கொள்ளத் தயங்கி தடுமாறினேன். எனது நண்பனே எனக்கு பூர்ணகும்பம் வைத்து மரியாதை செய்தது என் கண்களை குளமாக்கியது என்றார்.

கழக ஆட்சியில்அரசு அலுவலக நடவடிக்கைகளில் தமிழ் மொழியைக் கையாளும்படி சொல்லி வந்தார் கலைஞர். ஓர் அதிகாரி முதல்வருக்கு அனுப்பிய கோப்பின்-பக்கத்தில் "மாண்புமிகு முதல்வருக்கு" என்று எழுத வேண்டியதை மா. மி. முதல்வருக்கு என்று குறிப் பிட்டு இருந்தார். அதைப் படித்த கலைஞர் "அதிகாரி யிடம் நான் சாதாரண முதல்வராகவே இருக்கிறேன்; மாமி முதல்வராக வேண்டாம்" என்றார். அதிகாரி தன்னை மறந்து சிரித்து விட்டார்.

கலைஞர் முதல்வராக இருந்தபோது தமிழ்க் களஞ்சியத் தின் பத்தாம் தொகுதி வெளியீட்டு விழா நடைபெற்றது. பக்தவத்சலமும் மேடையில் இருந்தார். விழாத்தலைவர் பேசும்போது கலைக் களஞ்சியப் பணி ஆண்டவன் அருளால் நடப்பதாக கூறினர். கலைஞர் பேசும் போது பின்வருமாறு கூறினர். ஆண்டவன் அருளால் இப்பணி நடப்பதாக தலைவர் கூறிய போது எனக்கு இங்கு அமர்ந் திருக்கும் முன்னுள் முதல்அமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்களின் நினைவேதான் வந்தது. அவர் ஆண்டவர், நாங்கள் ஆளுகிறவர்கள். கலைக் களஞ்சிய பணிக்கு அப் பொழுது ஆண்டவரின் அருளோடு இப்போது ஆளுகின்ற எங்கள் உதவியும் கிடைக்கும் என்றார். கூட்டத்தில் சிரிப்பு அலை மோதியது.

கலைஞர் அவர்கள் சிந்தனையே கவிதை வண்ணங்கள்.

காலத்தினுல் அழிந்திடாத நினைவுச் சின்னங்கள்.
வளர்தமிழின் புகழ் பெருக்கும் வள்ளுவர் கோட்டம்.
மாவீரன் கட்டபொம்மன் பேரெழில் கோட்டை
அலை கடலின் கரையில் புது பூம்புகார் மன்றம்.
அருங்கலைஞர் சாதனையை வாழ்த்திடும் என்றும்
கடலருகே அண்ணுவின் கோட்டமும்
காமராஜர், ராஜாஜி அமைதி மன்றமும்
உடன்பிறந்த தமிழர்களுக்கெல்லாம் பெருமை தேடும்
ஒப்பில்லாத கலைஞருக்கே வாழ்த்துக்களைப் பாடும்
அடல்முடிக்க அறுபத்து இரண்டில்
அடிபதிப்பவர்
ஆண்டுநூறும் தமிழை ஆண்டு வாழ்கவே.

நன்றி வணக்கம்.

இலக்கிய விருந்து

□□□ தஞ்சை மாவட்டம் மன்னர்குடியில், மன்னை இலக்கிய வட்டத்தின் மூன்றுவது ஆண்டு விழா 18-8-85 அன்று நடைபெற்றது.

தலைவர் கலைஞர் விழாவில் பங்கேற்று "இலக்கிய விருந்து" என்ற தலைப்பில் ஆற்றிய உரை.

மன்னை இலக்கிய வட்டத்தினுடைய விழாவில் கலந்துகொண்டு உங்களையெல்லாம் சந்திக்கின்ற பெரும் வாய்ப்பினை எனக்குத் தந்த இலக்கிய வட்ட நண்பர்கள் அனைவருக்கும் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே வரவேற்று பேசியவர்-தலைமை வகித்தவர்-நன்றி கூறியவர் அனைவரும் என்னை விருந்தினர் என்றே குறிப்பிட்டார்கள். மேலும் நான் இலக்கிய விருந்து அளிப்பேன் என்றும் சொன்னார்கள்.

விருந்து அளிப்பவர்கள் விருந்தினராக இருக்கமுடியாது (கைதட்டல்) என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். ஒரு வேளை விருந்தளிக்க வந்திருப்பதால் விருந்தினர் ஆக்கப்பட்டு விட்டேனே, அதுவும் எனக்குப் புரியவில்லை. மன்னைக்கு வந்தால் நான் விருந்து அருந்தி பழக்கமே தவிர, விருந்து அளித்து பழக்கமல்ல; இருந்த

போதிலும் இந்த இலக்கிய வட்டத்தில் நான் ஆற்ற வேண்டிய உரைக்கான தலைப்பு "இலக்கிய விருந்து" என்பதாகும்.

நம்முடைய செயலாளர் நண்பர் நாராயணன் அவர்கள் வரவேற்ற போது ஒரு வேண்டுகோளை எனக்கு விடுத்தார்கள். அண்மைக் காலமாக பெரும் இலக்கியங்கள், காலத்திற்கும் அழியாத செல்வங்களாக தமிழகத்திற்கு கிடைக்கவில்லையென்றும்- அப்படியொரு இலக்கியப் பனுவலை நான் யாத்துத்தர வேண்டுமென்றும் குறிப்பிட்டார்கள்.

எனக்கு உடனடியாக மின்னல்போல் உள்ளத்திலே ஏற்பட்ட உணர்வெல்லாம்-நான் எழுதி முடித்து வெளியிட்டிருக்கிற "குறளோவியம்" அந்தத் தகுதியைப் பெறவில்லையோ; "குங்குமம்" வார இதழில் நான் எழுதிக் கொண்டு வருகிற "சங்கத் தமிழ்" அந்தத் தகுதியைப் பெறவில்லையோ என்பதுதான் அந்த உணர்வு!

இருப்பினும் கூட அவருடைய வேண்டுகோள் புறக்கணிக்கப்படக் கூடியதல்ல; நான் அந்த வேண்டுகோளை இன்றல்ல-பல நாட்களுக்கு முன்பே சிந்தித்து-சிந்தித்துத்தான்- காலத்தால் அழிக்க முடியாத சில காரியங்களைச் செய்ய வேண்டும் என்கிற முடிவுக்கு வந்தவனுக- 'குறளோவியம்' தீட்டுகின்ற பணியையும், சங்க இலக்கியங்களை எளிய நடையில் தமிழர்களுக்குத் தருகின்ற அந்தப் பணியினையும் மேற்கொண்டிருக்கிறேன்.

அரசியல் ரீதியாக ஆற்றுகின்ற பணிகள், அந்த அரசியல்வாதிகள் வாழ்கிற காலத்திலேயே மறைந்து விடவும் கூடும்!

உதாரணமாக, தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்கு எனது ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டிருக்கிற வீடுகளின் எண்ணிக்கை தெரியுமா என்று கேட்டாலோ—

தஞ்சை மாவட்டத்தில் தண்ணீர் பஞ்சம் இல்லாமல் நாங்கள் ஆட்சி புரிந்தபோது பார்த்துக் கொண்டோமே என்று அரசியல்வாதியாக இருந்து கேட்டாலோ—

தமிழகத்தில் மின் விளக்கு இல்லாத சிற்றூர்கள், கிராமங்கள் இருக்கக் கூடாது என்று திட்டமிட்டு அந்தப் பணியைச் செய்து முடித்தோமே என்று கேட்டாலோ- குடிசைமாற்று வாரியம், குடிநீர் வாரியம் கண்டது நாங்கள்தானே என்று கேட்டாலோ—

அவைகள் எல்லாம் மறந்து விடக்கூடியவை; மறந்து விடப்பட்டவை; அது அனுபவ ரீதியாக உங்களுக்கும் எனக்கும் தெரிந்த உண்மைகள்.

எனவே தான் நம்முடைய காலத்திலே மறந்து விடக் கூடிய காரியங்களைச் செய்வதை விட-எனக்குப் பிறகும் கூட-நின்று நிலவிடக் கூடிய காரியங்களைச் செய்து விட்டுப் போக வேண்டும் என்றுதான் 'குறளோவியம்' 'சங்கத்தமிழ்' போன்ற இந்தப் பணிகளை நான் ஆற்றிக் கொண்டிருக்கிறேன்.

நான் இப்படிச் சொல்கிற காரணத்தால் இந்த இலக்கிய வட்ட விழாவிற்கு வந்திருக்கிற அரசியல் கருத்து படைத்தவர்கள்- மன்னர்குடியில் நடைபெற்ற இந்த விழாவில் கருணாநிதி அரசியலை விட்டு ஒதுங்குவ தாக பிரகடனம் செய்து விட்டான் என்று யாராவது ஐயப் பட்டால், தயவு செய்து அந்த ஐயத்திற்கு உங்களை ஆளாக்கிக் கொள்ளத் தேவையில்லை. அரசியலில் இன்னும் எந்த அளவிற்கு தியாகம் செய்ய வேண்டுமோ, அந்தத் தியாகங்களைத்தொடர்ந்து செய்வேன்.

நம்முடைய நடனம் அவர்கள் பேசும் போது என்னு டைய வாழ்க்கையில் அரசியல், இலக்கியம் இரண்டும் நாணயத்தின் இரு பக்கங்களைப் போல இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். இலக்கியம் ஒரு பக்கமாக இருந்தால் கூட, இன்னொரு பக்கம் வெறும் அரசியல் அல்ல, தியாக

அரசியல்; அந்த தியாக அரசியலுக்காக என்னை அர்ப்பணித்துக் கொள்ள என்றென்றும் தயாராக இருக்கிறேன்; அதுவும் தமிழுக்காக-தமிழ் மக்களுக்காக-தமிழ் நாட்டுக்காக என்பதையும் இந்த முன்னுரையிலே தெரிவிக்க வேண்டியது இன்றியமையாதது என்ற காரணத்தால் தான் அதைக் குறிப்பிடுகிறேன்.

நண்பர் நடனம் அவர்கள் அறிக்கை படித்த போது இந்த இலக்கிய வட்டத்தில் நடந்து முடிந்த பல்வேறு விழா நிகழ்ச்சிகளையெல்லாம் தொகுத்து அவைகளிலே கேட்கப்பட்ட கேள்விகளையெல்லாம் வகுத்து-எடுத்துரைத்தார்கள்.

நான் அவைகளைக் குறித்து எந்த விமர்சனமும் செய்யத் தயாராக இல்லை: செய்யப் போவதுமில்லை. ஆனால் ஒன்றுக்கு மாத்திரம் விளக்கம் அளிக்க வேண்டியது என்னுடைய கடமையாகும்.

இலக்கியம் என்றால் என்ன என்று கேட்கப்பட்ட ஒரு கேள்விக்கு-இலக்கியம் என்று ஒன்று இல்லை; அது வெறும் கற்பனை என்று பதிலளிக்கப்பட்டதாக நடனம் அவர்கள் சொன்னார்கள்.

ஆனால் இலக்கிய வட்டம் வெளியிட்டுள்ள இந்த அழைப்பிதழில் இலக்கியத்தைப் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. அதிலே இறுதிப் பகுதியில் சொல்கிறார்கள்.

"அறிவு நலக் கூறு-கற்பனை நலக் கூறு- உணர்ச்சி நலக்கூறு இவை அனைத்தும் பொருந்தி இருப்பின் அதுவே சிறந்த இலக்கியமாகும்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இதிலே நான் செய்ய விரும்புகிற திருத்தம் ஒன்றே ஒன்றுதான்!

"அறிவு நலக் கூறு- கற்பனை நலக் கூறு- உணர்ச்சி நலக் கூறு- கலை நலக் கூறு- இவை அனைத்தும் பொருந்தி ஒரு இலக்கினைக் கொண்டதே இலக்கியம்!"

இலக்கு + இயம் = இலக்கியம்; தேசம் + இயம் = தேசியம்; காந்தி + இயம் = காந்தீயம்; அதைப் போலவே ஒரு இலக்கு- ஒரு நோக்கு-ஒரு குறிக்கோள்-ஒரு AIM- அதை வைத்துதான் இலக்கியம் உருவாக முடியும்! உருவாக வேண்டும். அப்படி உருவாகாத இலக்கியங் களுக்குச் சொந்தக்காரர்கள் வேண்டுமானால், இலக்கியம் என்ற ஒன்றே கிடையாது என்று கூறக் கூடும்.

ஒரு காலத்தில் கோவையில் நடைபெற்ற முத்தமிழ் மாநாட்டில் 'இலக்கிய மன்றம்' ஒன்றை தமிழகத்திலே மாநில அளவில் நிறுவ வேண்டுமென்று முடிவெடுக்கப் பட்ட போது பெரும் புலவர்களுக்கிடையே ஒரு சர்ச் சையே ஏற்பட்டது.

'இலக்கிய மன்றம்' என்று பெயர் வைக்கக் கூடாது; இலக்கியம் என்பது 'இலட்சியம்' என்ற வடமொழி சொல்லிலேயிருந்து வந்த வார்த்தை; எனவே இலக்கியம் என்று பெயர் வைக்கக் கூடாது என்று ஒரு சாரார் வாதிட் டார்கள்.

மற்றொரு சாரார்—அவர்களும் புலவர் கூட்டத்தினர் தான். அவர்கள் 'இலங்குதல்' என்ற தமிழ்ச் சொல்லிலே யிருந்து வந்தது தான் இலக்கியம்; எனவே தமிழ்தான். 'இலக்கிய மன்றம்' என்றே சொல்லலாம் என்று சொன்னார்கள்.

இரண்டு நாள் மாநாட்டில் இது குறித்தே ஒன்றரை நாள் விவாதம் நடைபெற்றது. அந்த மாநாட்டில் அண்ணா அவர்கள் கலந்து கொண்டிருந்தார்கள்.

அவ்வை துரைசாமிப் பிள்ளை, நாவலர் சோமசுந்தர பாரதியார், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், வெள்ளை வாரணர், பன்மொழிப் புலவர் அப்பாதுரையார் இப்படிப் பட்ட பெரும்பெரும் புலவரேறுகள் கலந்து கொண்ட மாநாடு அது. புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் தலைமையில் தான் அந்த மாநாடு நடைபெற்றது. அதிலே எனக்கு உரையாற்ற வாய்ப்புக் கிடைத்த போது நான் சொன்னேன்.

"தமிழ்ப் பெரும் புலவர்கள் இரண்டு நாளாக மாநாடு கூட்டி, பல்லாயிரக் கணக்கான வெண்பொற்காசுகளை செலவழித்து, ஆயிரக்கணக்கான மக்களையும் எதிரே அமர்த்தி 'இலக்கியம்' தமிழா? அல்லவா? என்ற ஆராய்ச்சியில் ஈடுபடுவதைவிட—இந்த மாநாட்டிற்கு முதல் நாள் ஒரு அறையிலே நீங்கள் அனைவரும் கூடி, நீங்களே ஒரு முடிவு செய்து, இலக்கியம் தமிழ் அல்லது தமிழ் அல்ல என்ற முடிவை எங்களுக்கு அறிவிப்பீர் களேயானால் அதை ஒத்துக்கொள்ள நாங்கள் அத்தனை பேரும் தயாராக இருக்கும் போது இப்படி இரண்டு நாள் மாநாட்டு நேரத்தை நீங்கள் இந்த ஒரே பிரச்னைக்காக செலவழித்திருக்க வேண்டுமா" என்று நான் அந்த மாநாட்டிலே கேட்டேன்.

காரணம் நாம் இது எந்த மொழிச் சொல் என்பதிலே காலத்தைக் கடத்தி ஒரு மாமன்றம் மாநில அளவிலே அன்றைக்கு அமைய இருந்ததை, இரு சாராருடைய சர்ச்சையின் காரணமாக அந்த பெரும் வாய்ப்பை தமிழ் நாடு இழந்து விட்டது என்பதை எடுத்துக் காட்டுவதற் காகத்தான் சொல்கிறேன்.

எனவே ஒருஇலக்கோடு-ஒரு நோக்கோடு-ஒரு குறிக் கோளோடு இயற்றப்படுகின்ற நூல்கள், கவிதைகள், காப்பியங்கள், அல்லது கட்டுரைகள் எல்லாமே இலக்கி

யங்களாகத்தான் ஆகின்றன. அப்படிப்பட்ட இலக்கியங்களை நாம் சங்க காலத்திலேயிருந்து பெற்றிருக்கிறோம். தொடர்ந்து பெற்றுக் கொண்டு வருகிறோம்.

சங்க இலக்கியங்கள் அக்கால மக்களுடைய வாழ்க்கை நிலையை இன்றைக்கும் எடுத்துக் காட்டுகின்ற வரலாற்றுக் குறிப்புகளாக நமக்கு கிடைத்திருக்கின்றன. தமிழ் நாட்டைப் பொறுத்தமட்டில் வேறு பல நாடுகளில் உள்ளதைப் போல ஒழுங்கான வரலாற்றுக் குறிப்புகள் நமக்குக் கிடையாது. நமக்கு நாமே நொந்து கொள்ள வேண்டிய ஒரு தகவல் இது.

இந்தியாவின் வரலாற்றை எழுதுகிற நேரத்தில், அது காவேரிக்கரையிலேயிருந்து ஆரம்பமாக வேண்டும் என்ற கருத்தை மனோன்மணியம் சுந்தரம்பிள்ளை அந்தக் காலத்திலேயே குறிப்பிட்டார். அந்தக் கருத்துக்கு மேலும் மெருகேற்றி, விளக்கமளித்து அறிஞர் அண்ணு அவர்கள் அண்ணுமலைப் பல்கலைக்கழகத்திலே ஆற்றிய உரையிலே "காவிரி கரையிலேயிருந்து இந்தியாவின் சரித்திரம் எழுதப்பட்டிருக்க வேண்டும்" என்றார்கள். ஏனென்றால் இந்தியாவிலேயே தொன்மை மிகுந்த நாகரீகம், கலாச்சாரம், பண்பாடு-இவைகளைக் கொண்ட ஒரு பகுதியாக தமிழகம் இருந்திருக்கிறது. ஆனால் என்ன காரணத்தாலோ, அது காவிரிக்கரையிலிருந்து எழுதப்படாமல் வடக்கே இருந்து எழுதப்பட்ட சரித்திரமாக ஆகிவிட்ட காரணத்தால் இந்திய வரலாற்றுப் புத்தகத்தில் தமிழ்நாட்டைப்பற்றிய குறிப்புகள்—இங்கே ஆட்சி புரிந்த பெரும் பெரும் மாமன்னர்கள், வீரர்கள் அவர்களைப்பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் எல்லாம் இந்திய வரலாற்று ஏடுகளிலே அங்கொன்றும் இங்கொன்றுமாக, சிலசில பகுதிகளாக—ஒன்றிரண்டு பக்கங்களாகத்தான் தொகுக்கப்பட்டிருக்கிறதே அல்லாமல் ஒரு முழுமை

யான வரலாறு நமக்கு கிடைக்கவில்லை. அந்த வரலாற்றை நாம் ஆராய்ந்து தேடியெடுத்து தொகுக்க வேண்டுமேயானால் அதற்கு பயன்படக் கூடியவைகள், இன்றைக்கு நமக்கிருக்கிற சங்க இலக்கியங்களே தவிர வேறு எதுவுமில்லை. அந்த சங்க இலக்கியங்களைக் கொண்டுதான் தமிழ்நாட்டிலே பழங்கால மக்கள் எப்படி வாழ்ந்தார்கள், எத்தகைய பண்பாடுகளை கடைப்பிடித்தார்கள், எத்தகைய வாழ்க்கைமுறைகள் அவர்களுடையது என்பதையெல்லாம் நாம் தெரிந்து கொள்ள முடிகிறது.

உலகத்திலேயே தமிழ் மக்கள் தங்களுடைய வாழ்க்கையை இரு கூருகப் பிரித்துக் கொண்டு, அதற்கு இலக்கியம் உருவாக்கிக் கொண்டு வாழ்ந்தவர்கள். அது எந்த இலக்கியமாக இருந்தாலும் சரி, எத்தனை யெத்தனை காப்பியங்கள் ஒரு பிரிவில் இருந்தாலும் சரி, எத்தனையெத்தனை காவியங்கள் இருந்தாலும் சரி, ஆயிரக்கணக்கிலே இருந்தாலும், இலட்சக் கணக்கிலே இருந்தாலும் அவை இரண்டு தொகுப்பாகத்தான் இருக்கும். ஒன்று அகம், மற்றொன்று புறம். அகத்துறை இலக்கியம், புறத்துறை இலக்கியம் என்ற இரண்டு இலக்கியங்கள். அகம், புறம் என்று வாழ்க்கையை வகுத்துக் கொண்டு வாழ்ந்தவன் தமிழன். இந்த அகம், புறம் பற்றி ஒரு முறை எனக்கும் நம்முடைய பேராசிரியர் அன்பழகன் அவர்களுக்கும் ஒரு விவாதமே ஏற்பட்டது. தஞ்சை மாவட்டத்திற்குத்தான் காரில் வந்து கொண்டி-ருக்கிறோம். முன்னிருக்கையில் அண்ணா அமர்ந்திருக் கிறார். நாங்கள் இருவரும்—அகம், புறம் என்கிற இந்த இலக்கியத்துறையைப் பற்றி சர்ச்சை செய்து கொண்டு வருகிறோம். நீண்ட நேரமாக எங்களுக்கிடையே வாத பிரதி வாதங்கள் நடைபெறுகின்றன. அமைதியாக அனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்த அண்ணா அவர் கள் சற்று பின்னே திரும்பி "என்னப்பா! இதற்கு

இவ்வளவு நேரம் பேசிக் கொண்டு வருகிறீர்கள். அகம் என்றுல் என்ன? புறம் என்றுல் என்ன? என்பதற்குக் கூடவா இவ்வளவு விவாதங்கள்? புறம் என்பது பகிர்ந்து கொள்ளக் கூடியது. அகம் என்பது பகிர்ந்து கொள்ள முடியாதது" இரண்டே வரிகளில் அண்ணு அவர்கள்மிக அழகானதொரு விளக்கத்தைத் தந்தார்கள்.

புறம் என்றுல் குறிப்பாக உணர்த்த வேண்டுமே யானுல் வீரம். போர்க்களத்திலே சென்று வீரச்செயல் செய்கிறேரும் என்றுல் அதைப் பகிர்ந்து கொள்ள முடியும். பலபேர் சென்று அந்த வீரத்தைப் பகிர்ந்து கொள்ள முடியும்.

அகம் என்றுல் வீட்டிலே நடக்கின்ற விவகாரங்கள். அதைப் பகிர்ந்து கொள்ள முடியாது. இதைத்தான் அண்ணு அவர்கள் அன்று வெகு அழகாகச் சொன்னுர் கள். அகம் பகிர்ந்து கொள்ள முடியாதது. புறம் பகிர்ந்து கொள்ளக் கூடியது என்று குறிப்பிட்டார்கள். அப்படி பகிர்ந்து கொள்ளக் கூடியவைகள்; பகிர்ந்து கொள்ள முடியாதவைகள் என்ற இலக்கணம் வகுக்கப் பட்டு தமிழன் தொன்மைக்காலத்திலே அகத்துறை, புறத்துறை என்கிற இரு கூறுகளை உருவாக்கிக் கொண்டு வாழ்ந்து காட்டியிருக்கிருன். அத்தகைய வாழ்க்கை யிலே அவனுக்கு கிடைத்த இலக்கியங்கள் ஒப்பற்றவை. நான் அவைகளை உங்களிடத்தில் வரிசைப்படுத்தி கூறுவ தற்குத்தான் இன்றைக்கு உங்களையெல்லாம் சந்திக்க வந்திருக்கிறேன்.

விருந்து படைக்கின்றேன். இப்பொழுது இலை போடப்படுகிறது. இலக்கிய இலைதான்! அரசியல் இலை அல்ல; இலை போடப்படுகிறது.

ஒவ்வொரு இலக்கியமாக உங்களிடத்திலே நேரம் இருக்கிறவரையிலே சொல்கிறவகையில் சிலவற்றை

இலையிலே பரிமாற நான் உங்கள் முன்னுல் வந்து நிற்கிறேன்.

நீங்கள் எல்லாம் விருந்தினர்கள், நான் விருந்து படைப்பவன். அமைதியாக இருந்து உணவு அருந்தி-உணவு அருந்தி முடித்த பிறகாவது இலையைத் தூக்கி எறிந்து விட்டு—(பலத்த கைதட்டல்)

விருந்து அருந்திய மயக்கத்தில் நன்முக ஓய்வெடுத்து, உறங்கி காலையிலே உதயசூரியனேடு (பலத்த கைதட்டல்) நீங்கள் எழுங்கள்; இலக்கியம் தான் பேசிக்கொண்டிருக்கிறேன். (மீண்டும் கை தட்டல்) அரசியலையும் இலக்கியமாகப் பேச முடியும். அப்படி பேச வைத்த பெருமை-அதுவும் எனக்கு அந்தப் பெருமையை அளித்தது, 1976-ம் ஆண்டு, நெருக்கடி காலம்.

அந்த நெருக்கடி காலத்தில் மூரசொலி ஏட்டின் மூலமாக, எத்தனையோ அரசியல் கருத்துக்களை இலக்கிய வடிவத்திலேதான் தமிழ்நாட்டு மக்களுக்கு என்னுல் தர முடிந்தது.

அரசியலாக எழுதினுல், அன்றைக்கு தணிக்கை அனுமதிக்காத காலம். எனவே இலக்கியங்களைத்தான் நான் அன்றைக்கு எழுதினேன். ஆனுல் அந்த இலக்கிய நுட்பங்களையும் புரிந்து கொண்டு, அதிலே என்ன அரசியல் நுழைந்திருக்கிறது என்பதையும் கண்டு கொண்டு அன்றைக்கு தமிழ்நாட்டு மக்கள் நிலவரங் களைத் தெரிந்து கொண்டார்கள். அந்த வகையிலேயே நான் இலக்கியங்களுக்கு நன்றி கூற வேண்டியவனுக இருக்கிறேன்.

இங்கே நம்முடைய இலக்கிய வட்டத்தினுடைய அன்பிற்குரிய நண்பர்கள் குறளோவியம் பற்றி சொன் னர்கள். சங்கத்தமிழ் பற்றி கூறினர்கள். மன்னை அவர்

கள் நான் எழுதி வருகிற சங்கத்தமிழ் தொடர்ச்சியிலே சில வரிகளையெல்லாம் இங்கே படித்துக் காட்டினர்கள்.

குறளோவியத்தை நான் எழுதி முடித்தபிறகு என்னுடைய நீண்டநாள் அவாவாக இருந்த சங்கத் தமிழை எளிய நடையில் தரவேண்டும் என்ற எண்ணத்தை ஈடேற்றிக் கொள்ள முயற்சியெடுத்தேன்.

அந்த முயற்சியின் முதற் கட்டமாக சங்கத் தமிழ் நூல்களையெல்லாம் மீண்டும் பலமுறை படித்தேன். அப்படி படிப்பதற்கான வாய்ப்புகள் எனக்கு நிறைய இல்லையென்றாலும், இடையில் ஒரு பதினைந்து நாட்கள் இலங்கைத் தமிழர் பிரச்னைக்காக—இன்று மன்னைக்கு விருந்தினராக வந்திருக்கின்ற நான் அரசாங்க விருந்தினராக சிறைச்சாலைக்குச் சென்றபோது சங்கத் தமிழ் நூல்கள் ஏராளமானவற்றைப் படிக்கின்ற சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தது. நான் இதுவரையில் எழுதியுள்ள சங்கத் தமிழ் வரிகள் பலவற்றை இங்கே வீற்றிருக்கின்ற இலக்கிய ரசனையுள்ள தாய்மார்களும் பெரியவர்களும், இளைஞர்களும் படித்திருக்கக் கூடும்; இருந்தாலும் கூட இனி எழுதவிருக்கின்ற சங்கத் தமிழ் வரிகளைப் பற்றியும் எழுதியவைகளைப் பற்றியும் அதிலே நான் எழுத விட்டு விட்ட நுணுக்கங்களைப் பற்றியும் எடுத்துக் கூறுவதால் உங்களுக்கும் உவகை; என்னுடைய இதயத்திற்கும் ஒரு உவகை!

ஒரு காதலி — தன்னுடைய காதலன் பிரிந்து போனதை எண்ணி வருந்துகிறாள். வருந்துகிற நேரத்தில் அவளுக்கு ஒரு ஆறுதலும், துணிவும்கூட ஏற்படுகிறது. பிரிந்து சென்ற காதலன் எப்படியும் தன்னை நினைத்துக் கொள்வான் என்று அவளுக்கு ஒரு தைரியமும், நம்பிக்கையும் ஏற்படுகிறது.

என்ன காரணத்தால் அந்த நம்பிக்கை ஏற்படுகிறது தெரியுமா? பிரிந்து போகிற காதலன், பாலைவனத்தில்

ஒரு கள்ளிக்காடு வழியாகச் செல்கிருனும். அவனைப் பற்றி காதலி—பிரிந்த காதலி பேசுவதாக பாலைபாடிய பெருங்கடுங்கோ, குறுந்தொகை இலக்கியத்திலே ஒரு ஐந்து வரி பாடலைப் பாடுவதாக அமைத்திருக்கிருர்.

"உள்ளார் கொல்லோ தோழி கள்வர்தம்
பொன்புனை பகழி செப்பங் கொண்மார்
உகிர்நுதி புரட்டும் ஓசைபோலச்
செங்காற் பல்லி தன்றுணை பயிரும்
அங்காற் கள்ளியங் காடிறந் தோரே"

கடுமையான நடைதான்! அவன் நடந்து செல்கிற பாலைவனத்திலே உள்ள கள்ளிக்காட்டைப் பற்றிக் குறிப்பிடுகிருர்களே, அதைவிட கடுமையான நடைதான்! இதை எளிமையாக ஆக்கி தமிழர்களுக்கு தர வேண்டும் என்பதுதான் என்னுடைய நோக்கம். அதனுல்தான் இதை எளிமையானதாக ஆக்கி, எழில் குறையாமல் தமிழ் மக்களுக்கு படைக்கின்ற அந்தப் பணியினை மேற் கொண்டிருக்கிறேன்.

"கள்ளிக்காடு நிறைந்த பாலைவனத்திலே பயணம் செய்கிருன் காதலன். அவனுக்கு என்னுடைய நினைவு வராமலா போகும்? எப்படி வரும்? ஏன் வரும் என்ருல் அந்த பாலைவன கள்ளிக் காடுகளில் பல்லிகள் உண்டு. அதிலே ஆண் பல்லி, பெண் பல்லியை நேசித்து அருகே அழைக்கும். அப்படி அழைக்கின்ற அந்த ஓசை இருக்கின்றதே,—புலவன் உவமை சொல்கிருன், பாருங்கள்! அந்த ஓசை எப்படிப்பட்ட ஓசையாம் தெரியுமா?

வேடனுடைய வில்லில் பூட்டப்படுகிற அம்பு தொடுக்கப்படுவதற்கு முன்பு, அந்த அம்பின் கூர்மை சரியாக இருக்கிறதா என்று பார்ப்பதற்காக, அந்த

அம்பினுடைய முனையை அந்த வேடன் நெருடிப் பார்ப்பான். அதாவது நகத்தோடு நகம் வைத்து நீங்கள் இப்படி தட்டிப் பார்த்தால் தெரியும் (தலைவர் கலைஞர் தன் கை விரல் நகத்தால் ஒலி பெருக்கியின் முன்னால் நெருடி ஓசையெழுப்பிக் காட்டுகிறார்) இந்த ஓசைதான் அந்த பல்லியின் ஓசை! (கைதட்டல்) கூர்மையான இரும்பு நுனி கொண்ட அம்பினுடைய முனையை நெருடிப் பார்க்கும்போது ஏற்படும் ஓசையை ஒத்த ஓசையைக் கிளப்பி ஆண் பல்லி பெண் பல்லியை அழைக்கும் போது நம்முடைய காதலனுக்கும் 'ஆகா! ஒரு பல்லி கூட தன் காதலியை விட்டுப் பிரியாமல் அழைக்கிறதே; நாம் நம்முடைய காதலியை விட்டுப் பிரிந்து போகிறேமே என்ற எண்ணம் அவனுக்கு ஏற்படாமல் போகுமா? அந்த நேரத்தில் உள்ளார் கொல்லோ? நம்மை நினைக்காமல் இருப்பானு?" என்று ஆறுதல் அடைகிறாள்.

இது குறுந்தொகையிலே வருகின்ற "பாலைபாடிய பெருங்கடுங்கோ" அறிமுகப்படுத்துகின்ற ஒரு பெண்ணின் உளப்பாங்கு.

அதைப்போல் மற்றொன்று! குறிஞ்சிக்கலி! கபிலர், சங்க இலக்கியத்தில் பல்வேறு பாடல்களைப் பாடியவர். அகநானூற்றில், புறநானூற்றில், கலித்தொகையில், கபிலரின் பாடல்கள் ஏராளம் உண்டு. அந்தக் கபிலர் தமிழின் பெருமையை—தமிழ் இலக்கிய பெருமையை எந்த அளவுக்கு உயர்த்திக் காட்டியிருக்கிறார்; அவர் தமிழனுடைய வீரத்தைப் பாடியிருக்கிறார். தமிழனுடைய வாழ்க்கை முறையைப் பாடியிருக்கிறார். காதல் காட்சிகளை இன்று படம் எடுத்துக் காட்டுகிறார்களே புதிய புதிய முறையில்; இவைகளையெல்லாம் வெல்லத்தக்க முறையில் ஆக்கிக் காட்டியிருக்கின்றார்.

கபிலருடைய பாடல் இது:-

"ஊசல் ஊர்ந்துஆட, ஒரு ஞான்று வந்தானை
'ஐய! சிறிது என்னை ஊக்கி' எனக்கூறத்
'தையால் நன்று' என்று அவன் ஊக்கக்; கை நெகிழ்பு
பொய்யாகவிழுந்தேன், அவன் மார்பில்; வாயாச் செத்து
ஒய்யென ஆங்கே எடுத்தனன்; கொண்டான் மேல்
மெய்யறியாதேன் போல் கிடந்தேன்மன்; ஆயிடை
மெய்யறிந்து ஏற்றெழுவானுயின், மற்று ஒய்யென
"ஒண்குழாய்! செல்க!" எனக் கூறிவிடும் பண்பின்
அங்கண் உடையன் அவன்"

தினைப்புனத்தில் ஊஞ்சல் கட்டி ஆடிக் கொண்டிருக் கிருள் ஒரு பெண். அப்பொழுது அவளுடைய அன்பிற் குரிய ஆடவன் அவ்வழியே வருகிருன். அவனைப் பார்த்து "இந்த ஊஞ்சலைக் கொஞ்சம் வேகமாக ஆட்டிவிடு" என்று இவள் கேட்கிருள்.

கேட்ட மாத்திரத்தில்- "தையால் நன்று" — "நல்லது தையலே" என்று சொல்லி விட்டு, அவன் ஊஞ்சலை ஆட்டுகிருன். அப்படி ஊஞ்சலை ஆட்டும் போது, அந்தப் பெண் வேண்டுமென்றே "பொய்யாக வீழ்ந்தேன் அவன் மார்பில்", அவன் ஊஞ்சலை வேகமாக ஆட்டிய போது, அவன் அப்படி ஆட்டிய காரணத்தால் விழுந்து விட்ட தாக நடித்து, "பொய்யாக அவன் மார்பில் வீழ்ந்தேன்" என்கிருள். அவனும் உடனே என்னை எடுத்துக் கொண் டான். நான் அவன் மீது விழுந்தது தெரியாமல் கிடந் தேன். தெரிந்து தான் கிடந்தேன் என்பது அவனுக்குத் தெரியுமானுல், நீ புரிந்தது தவறு என்று என்னை கண்டித்து விட்டு, உடனே ஓடு என்று என்னை விரட்டக் கூடியவன் அவன்; எனவேதான் நான் பொய்யாக அவன் மார்பினிலே விழுந்தேன். விழுந்த பிறகும் கூட தெரியாத தைப் போலவே இருந்தேன். நான் தெரிந்துதான் வீழ்ந் தேன் என்பது அவனுக்கு தெரியுமானுல் அவன் என்னைத்

துரத்தக்கூடிய பண்புடையவன் என்று சொல்லுகிருள் அந்தப் பெண்.

அந்தக் காலத்தில் அரசர்களும் புலவர்களாக இருந்தார்கள். குறிப்பாக, சோழப் பரம்பரையில் வந்த கோப்பெருஞ்சோழன் ஒரு சங்க காலப் புலவனுக இருந்திருக்கிருன்.

"அருளும் அன்பும் நீக்கித் துணை துறந்து
பொருள் வயிற் பிரிவோர் உரவோர் ஆயின்
உரவோர் உரவோர் ஆக மடவம் ஆக நாமே"

அன்பையும் அருளையும் நீங்கி நம்மிடம் துணையாக இல்லாமல் பெரும் பொருளுக்காக நம்மை விட்டுப் பிரிபவர்கள், அறிவுடையவர்கள் என்று தம்மைச் சொல்லிக் கொண்டால் அவர்கள் அறிவுடையவர்களாகவே இருக்கட்டும். அவர்களைப் பிரிந்த காரணத்திற்காக நாம் வேதனைப்படுவோமேயானுல் நாம் அறிவிலிகளாகவே இருப்போம்; மூடர்களாகவே இருப்போம்.

புரிகிறதா உங்களுக்கு?

அருள், அன்பு இவைகளையெல்லாம் நீங்கி துணையாக இருப்பதையும் துறந்து, கேவலம் பொருளுக்காக பிரிந்து போகிறவர்கள் அறிவுடையவர்களாக இருந்தால் அவர்கள் அறிவுடையவர்களாகவே இருந்து விட்டுப் போகட்டும், அவர்களைப் பிரிந்து துன்பத்திலே ஆழ்ந்திருக்கிற நாம் அறிவிலிகள் என்ருல், அறிவிலிகளாகவே இருந்து விட்டுப் போவோம் என்று ஒரு பெண் பாடுவதாகக் கோப்பெருஞ்சோழன் பாடினுன்.

அது அந்தப் பெண்ணுக்கும் பொருந்தும், இப்போது இந்த மண்ணுக்கும் பொருந்தும்.

அடுத்து உவமைகளுக்கு ஒரு எடுத்துக் காட்டு!

நான் கூட சங்கத்தமிழில் எழுதியிருக்கிறேன். கானப்பேர்எயில் கடந்த உக்கிரப்பெருவழுதி பாண்டியனப் பற்றி!

கானப் பேர் என்பது இன்றைக்கு இராமனுதபுரம் மாவட்டத்தில் இருக்கின்ற காளையார் கோவில். இன்றைக்கும் அந்த ஊரில் அதை கானப் பேர் என்றுதான் அழைப்பார்கள். காளையார் கோவிலுக்கு கானப் பேர் என்று பெயர் வழங்கிய சங்க காலத்தில் ஒரு மாபெரும் அரண் அங்கே கட்டப் பட்டிருந்தது. அந்த அரணைக்கட்டியவன் வேங்கைமார்பன் என்ற குறுநில மன்னன். அந்த அரண யாரும் துளைத்திட இயலாது. யாரும் அந்த அரணுக்குள் புகுந்திட இயலாது. அவ்வளவு வலுவான அரண் என்ற பெருமையுடையது அந்த அரண். அந்த பெருமை பற்றி கேள்விபட்டான் பாண்டிய பெருமன்னன் உக்கிரப் பெருவழுதி. அந்த அரண எப்படியும் கைப்பற்ற வேண்டுமென்று போர் தொடுத்து, வேங்கை மார்பனை வென்று கானப் பேர் என்கிற அந்த வலுவான கோட்டையைக் கைப்பற்றிக் கொண்டான். கைப்பற்றிக் கொண்டு பாண்டி நாட்டுக்கு வந்து கொலு மண்பத்தில் வீற்றிருக்கிற போது அவனை ஐயூர் மூலங்கிழார் என்ற புலவர் சந்திக்கிறார்.

பாண்டியன் கேட்கிறான். 'கானப்பேர் என்ற ஊரிலே உள்ள கோட்டையை நாம் வென்று விட்டோமே, அந்த வேங்கை மார்பன் மீண்டும் அந்தக் கோட்டையைப் பிடிக்க போர் தொடுப்பானு?' என்று கேட்கிறான். அதற்கு புலவர் பதில் சொல்கிறார்:

''கானப்பேர் எயில்
கருங்கைக் கொல்லன் செந்தீ மாட்டிய
இரும்புஉண் நீரினும் மீட்டற்கு அரிது என
வேங்கை மார்பன் இரங்க...''

என்று கடின தமிழில் கூறுகிருன். எளிய தமிழில் இதற்கு என்ன விளக்கம் என்ருல்—

"பாண்டிய மன்னு! உன்னுல் வெற்றி கொள்ளப் பட்ட கானப்பேர் என்ற ஊரிலே உள்ள அரணை— அந்தக் கோட்டையை மறுபடியும் உன்னிடமிருந்து மீட்பது என்பது இயலாத காரியம் என்று வேங்கை மார்பன் வருந்துகிருன். ஏனென்ருல் அதை நீ எப்படி ஆக்கிவிட்டாய் என்ருல்—உலக்களத்திலே இரும்பு பழுக்கக் காய்ச்சப்படுகிறது. அந்த இரும்பில் ஒரு துளி நீர் பட்டால் மறுபடி அந்த நீரை மீட்க முடியுமா? முடியாதல்லவா? அதுபோல நீ வென்ற கானப்பேர் கோட்டையை வேங்கை மார்பன் மீண்டும் மீட்க முடியாது என்று குறிப்பிடுகிருன்.

எவ்வளவு அழகான உவமை என்று பாருங்கள்!

இவைகள் சங்க இலக்கியங்கள் நமக்குத் தந்துள்ள இன்பப் புதையல்கள்.

சங்கம் மருவிய நூல் என்றும்—ஆனுல் தமிழர் களுடைய மறை நூல் என்றும் போற்றப்படுகின்ற திருக்குறள்—உலகத்திற்கே வாழ்க்கைநெறியை வகுத்துத் தந்த நூல்! எந்த அளவிற்கு கருத்துக்களை நம்முடைய உள்ளத்திலே பதிய வைத்து, நம்முடைய வாழ்க்கை செம்மையுற வேண்டும் என்பதற்காக அறிவு தரும் நூலாக அமைந்திருக்கிறது என்பதற்கு ஒன்றிரண்டு எடுத்துக் காட்டுகளை மட்டும் நான் உங்கள் முன்னுல் வைத்திட விரும்புகிறேன்.

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை"

மன்னூர்குடி வட்டாரத்தில் இலக்கிய மன்றத்தில் கருணநிதி பழங்கால இலக்கிய காதல் காவியங்களை

மாத்திரம் கூறிவிட்டுச் சென்று விட்டான் என்று என் னுடைய அன்பிற்குரிய பொதுவுடமை நண்பர்கள் வருத்தப்படுவார்கள் என்ற காரணத்தினுல்—

வள்ளுவர் கூறியதைக் கூறுகிறேன்.

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர் தொகுத்த வற்றுள் எல்லாம் தலை"

கிடைத்த பொருளை ஒருவனே—ஒரு ஆதிக்கக் காரனே, தானே வைத்துக் கொள்ளாமல் அதைப் பகுத்து அனைவரும் உண்ணுகின்ற அளவிற்கு ஒரு நிலைமை ஏற்பட்டால் அந்த நிலைதான் சரியான நிலை யென்று கூறுகின்ற கருத்து இருக்கிறதே, அந்தக் கருத் துத்தான் நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை—உல கத்திலே எழுதப்பட்ட எல்லாக் கருத்துக்களுக்கும் தலையாயது!

அரசு முறை பற்றி சொல்ல வந்தவர்—

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு"

இயற்றல் வேண்டும்! ஈட்டல் வேண்டும்! இயற்றி யதையும், ஈட்டியதையும் காத்திட வேண்டும், அப்படி காத்ததை வகுத்து அளிக்க வேண்டும். இத்தனையிலும் வல்லதுதான் ஒரு அரசு என்று குறிப்பிட்டார் வள்ளுவர்!

அப்படிப்பட்ட ஒரு அரசு நடைபெறுகிறதா? அந்தக் கேள்வியை நான் இங்கே கேட்க மாட்டேன். (கை தட்டல்) ஆனுல் இப்படித்தான் ஒரு அரசு இருக்க வேண்டுமென்று வள்ளுவன் கூறுகிருன்.

இயற்றல், ஈட்டல், காத்தல்-காத்தலை வகுத்தல்; அதிலே வல்லதுதான் ஒரு அரசு! இதைக் குறிப்பிடும் அதே வள்ளுவன்-புறத்துறையில் மாத்திரமல்லாமல்

அகத்துறையிலும் நுழைந்தவன்; அதிலும் ஒன்றிரண்டு குறட்பாக்களை உங்கள் முன்னுல் வைக்க விரும்பு கிறேன்.

ஒரு குடும்பத்தில் ஒரு மங்கை தன் கணவன் மீது கோபம் கொண்டிருக்கிருள். வருவதாகச் சொல்லி விட்டுப்போன கணவன் குறித்த நேரத்தில் குறித்த நாளில் வரவில்லை என்ற கோபம்! வேலைமீது போய் விட்டான் என்கிற சினம்! அல்லது யாரோ கோள்மூட்டி அதனுல் ஏற்பட்ட ஐயம்! இவ்வளவு ஆத்திரத்தோடு அந்த மங்கை காத்திருக்கிருள். 'வரட்டும் அவன்! என்ன பாடுபடுத்துகிறேன் பார்!' என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிருள்.

இங்கிருக்கின்ற உங்களுக்கெல்லாம் தெரியாதது அல்ல; (சிரிப்பு)

அப்படி சொல்லிக் கொண்டிருக்கும்போது அவனும் வந்துவிடுகிருன். வந்தவுடன்—அடுத்தவீட்டுத் தோழி யிடமும், எதிர்த்தவீட்டுத் தோழியிடமும் அவள் விட்ட அறைகூவல்களையெல்லாம் மறந்து விடுகிருள்.

அவன் வந்தவுடன், அனைத்தையும் மறந்து அவனை ஆரத்தழுவி வரவேற்கிருள். அங்குதான் வள்ளுவர் சொல்கிருர்;

எழுதுங்கால் கோல்காணு கண்ணேபோல் கொண்கண்
பழிகாணேன் கண்ட இடத்து!

எழுதுகிற நேரத்திலே கோல் காணுத கண்; பெண்கள், கண்களுக்கு மை எழுதிக் கொள்கின்ற பழக்கம் உண்டு. மை எழுதுகின்ற கிண்ணத்திலே மை இருக்கும் பொழுது அதிலே அந்த எழுதுகின்ற கோலை தோய்க்கும் போது அந்த எழுது கோல் கண்ணுக்குத் தெரியும். சற்று அருகே கொண்டு வரும் போது கண்ணுக்குத் தெரியும்.

அதாவது கண்ணுக்கு ஓரளவு தொலைவில் வைத்திருக்கும் வரை அந்த மை எழுதுகோல் கண்ணுக்குத் தெரியும். ஆனல் கண்ணிலே வைத்து-நிலைக்கண்ணுடி இல்லாமல் —அந்த மையைத் தீட்டிக் கொள்ளும் போது, அந்த எழுதுகோல் அந்தக் கண்ணுக்குத் தெரிவதில்லை.

அதுபோல கணவன் தொலைவிலே இருக்கிற வரையிலே, அவனுடைய குற்றம் தெரிகிறதாம். அருகிலே அவன் வந்ததும் அவனுடைய குற்றம் தெரிய வில்லையாம். (கைதட்டல்)

இன்னெரு வீடு! படுக்கையறை! கணவன் தும்மு கிருன். பழைய காலத்தில் தும்மினுல், ஏன் இந்தக் காலத்திலேகூட நம்முடைய பாட்டிமார்கள், தும்மிய வுடன் நூறு, இருநூறு என்று நம்முடைய ஆயுளுக்கு வாழ்த்து கூறுவது வாடிக்கை;

இங்கே கணவன் தும்முகிருன். படுக்கையறை— ஆகவே பாட்டி இல்லை (சிரிப்பு) பாவைதான் இருக் கிருள்.

சொல்லுகிருன்

"வழுத்தினுள் தும்மினேன் ஆக அழித்தழுதாள்
யாருள்ளித் தும்மினீர் என்று"

நான் தும்மினேன் படுக்கையறையில்; வழுத்தினுள்— வாழ்த்தினுள்; வாழ்த்திய அடுத்த கணமே, அழித்து அழுதாள் யாருள்ளி தும்மினீர் என்று—யாராவது நினைத் தால்தானே தும்மல் வரும்; ஆகவே உம்மை யார் நினைத்தார்கள் அல்லது நீர் யாரை நினைத்தீர்? என்று அழித்து அழுதாளாம்.

எதை அழித்து அழுதாள்? அவனையல்ல; அவள் முதலிலே அவசரமாக தந்துவிட்டாளே வாழ்த்து—

அந்த வாழ்த்தை அழித்துவிட்டு—அழுதாளாம்.

ஏதோ கரும்பலகையிலே வாழ்த்தை எழுதியதைப் போல, அதை அழித்து அழுதாள்.

"யாருள்ளி தும்மினீர் என்று?"

இன்னொரு நயம் பாருங்கள்; நான் குறளோவியம் எழுதியபோதுகூட எனக்கு அந்த நயம் தெரியவில்லை. இப்போது தெரிகிறது.

அதை அழிப்பதற்கு அழுகை தேவைப் பட்டிருக்கிறது. கண்ணீரால் அழித்திருக்கிருள். அழித்தழுதாள் யாருள்ளித் தும்மினீர் என்று! என்னடா சங்கடமாகப் போய்விட்டது என்று உடனே சொல்லுகிருன் இவன்:

"யாரினும் காதலம் என்றேனு?" நான் எல்லோரையும் விட உன்னிடம் அதிகம் காதல் கொண்டிருக்கிறேன் என்று கூறுகிருன்.

உடனே அவள்—ஊடினுள் "யாரினும் யாரினும் என்று"

எல்லோரையும் விட உன்னை அதிகமாக நேசிக்கிறேன் என்று சொன்னவுடன், மறுபடியும் அவள்—'யாரைவிட?" "யாரைவிட?" என்று பெயர்களைச் சொல்லிக் கேட்கிருள்.

நான் அந்தப் பெயர்களையெல்லாம் சொல்ல விரும்பவில்லை. தப்பித் தவறி இங்கே யார் பெயராவது இருந்தால் நான் ஊர்போய்ச் சேர முடியாது. (சிரிப்பு)

ஒன்றைச் சொல்வேன்.

உலக இலக்கியம் எதிலுமே இல்லாத ஒரு காதல் பிரிவு பற்றிய கருத்தை— வேறு எந்தப்புலவர்களானு

லும் சொல்லாத ஒரு கருத்தை வள்ளுவர் சொல்லி யிருக்கிறார்.

காதலன் காதலியிடம் வந்து—தனக்குள்ள ஒரு பணியினைச் சொல்லி, அதன் காரணமாக அவனைப் பிரிந்து செல்லவேண்டும் என்று விடைபெற விழை கிறான்.

"எனக்கு விடை கொடு! போய் வருகிறேன்! என்று சொல்கிறான்.

அப்பொழுது அந்தக் காதலி சொல்கிறாள்.

"செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை"

நீ போவது இல்லை என்று சொன்னால் என்னிடம் பேசு! இல்லாவிட்டால் நீ திரும்பி வரும்போது யார் உயிரோடு இருப்பார்களோ, அவர்களிடம் சொல்லிக் கொண்டு போ!" என்கிறாள்.

என்ன பொருள் இதற்கு? நீ பிரிந்து சென்றால் நான் உயிரோடிருக்கமாட்டேன்; எனவே நீ செல்வது இல்லை யென்றால் எனக்குரை; மற்று நின் வல்வரவு—நீ போய் திரும்புகிறேன் என்று சொல்கிறாயே, அப்படி திரும்பி வரும்போது "வாழ்வார்க்குரை"—யார் அப்போது உயி ரோடிருப்பார்களோ அவர்களுக்கு உரை, என்னிடம் சொல்லாதே! நான் அப்பொழுது இருக்கமாட்டேன்!

அந்த அளவிற்கு உச்சக் கட்டத்திலே காதலனின் பிரிவை காதலி தாங்கிக்கொள்ள முடியாமல் தவிப்பதை வள்ளுவரைத் தவிர இந்த வையகத்தில் எந்தக் கவிஞ னும் இவ்வளவு சிறப்பாக எழுதியது கிடையாது. இது தமிழுக்கு—தமிழ் இலக்கியத்திற்குள்ள ஒரு பெரும் பெருமையாகும்.

குடும்பத்திற்கு வருகிறார் வள்ளுவர்.

"குழலினிது யாழ்இனிது என்பதம் மக்கள்
மழலைச் சொல்கேளா தவர்"

இதைக்கூட அரசின் சார்பில் சொல்ல வேண்டுமே யானால் அந்தக் காலத்திலேயே வள்ளுவர் குடும்ப நலத் திட்டத்தைப் போதித்திருக்கிறார்.

தன்னுடைய குழந்தையின் மழலைச்சொல்லைக் கேட் காதவர்கள்தான் குழல் இனிமையானது; மீட்டப்படு கின்ற யாழ்—அந்த மென்மை இசை இனிமையானது என்று பாராட்டுவார்கள். அப்படிப் பாராட்டுபவர்கள் தங்கள் குழந்தையின் மழலைச் சொல்லைக் கேட்காத வர்கள்; மழலைச்சொல் குழலைவிட இனிமையானது; யாழைவிட இனிமையானது. ஆனால் அதை இனிமை யில்லை என்று யாராவது சொன்னால் அவர்கள் தங்கள் குழந்தையின் மழலையைக் கேட்காமல் இருப்பார்கள் என்று குறிப்பிடுகிறார்.

குழல், யாழ் என்று இரண்டை மட்டும் குறிப்பிட்ட தற்குக் காரணம் "இரண்டே போதும்" என்பதற்காகத் தான். (கைதட்டல்) இல்லாவிட்டால் 'ஆர்செஸ்ட்ரா இனிது' என்றும் சொல்லியிருப்பார். அதனால் தான்

"குழலினிது யாழ்இனிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்"

என்று வள்ளுவர் கூறுகிறார்.

அந்தக் குழந்தை எவ்வளவு பெருமை வாய்ந்தது என்பதற்கு—மற்றொரு குறள்!

உழவன் கழனியிலிருந்து வேலை முடிந்து இல்லம் திரும்புகிறான். அவனுக்கு அவனுடைய வாழ்க்கைத்

துணைவி கலயத்தில் கூழ் பரிமாறுகிருள். 'இந்தக் கூழ் தானு? அதுவும் உப்பில்லாத கூழ்தானு?' என்று உழவன் சலித்துக் கொள்கிருன். அந்த நேரத்தில் தாழ்வாரத்தில் தவழ்ந்து கொண்டிருந்த குழந்தை மெல்ல தவழ்ந்து தவழ்ந்து வந்து—அந்தக் கலயத்திற்குள் தன் கையை விட்டு துழாவுகிறது. அதுவரை இந்த உப்பில்லாத கூழ் தானு என்று சலித்துக் கொண்டிருந்த உழவன் "ஆகா! இது அமிழ்தமாகி விட்டது; அமிழ்தமாகிவிட்டது" என்று கூச்சல் போடுகிருன்.

எப்படி அமிழ்தம் ஆயிற்றும்? வள்ளுவர் சொல் கிருர்.

அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ்"

தான் பெற்ற குழந்தையின் பிஞ்சுக் கரங்களால் துழாவப்பட்ட கூழ்—'அமிழ்தினும் ஆற்ற இனிதே' அமிழ்தத்தை விட உயர்ந்தது என்று கூறுகிருன்.

"அப்படியானுல் கருணநிதி, நீ அமிழ்தத்தை ஒப்புக் கொள்கிருயா?" என்று கேட்கக்கூடும்.

அமிழ்தம் என்றுல் தேவாமிர்தம்! அது தேவலோகத்தில் இருப்பதல்லவா? அந்த அமிர்தத்தை கடைந்தெடுப்பதற்காக அசுரர்கள் ஒரு பக்கமும், தேவர்கள் ஒரு பக்கமும் 'வாசுகி' என்ற பாம்பின் தலையை அசுரர்களும், வாலை தேவர்களும் பிடித்துக்கொண்டு—மலையை மத்தாகக் கொண்டு கடலை கடைந்து அந்தக் கடலிலேயிருந்து விஷமும், அமிர்தமும் பொங்கிக் கிளம்பியபோது அந்த விஷத்தை உலகத்திலே பரவவிட்டால் உலகம் அழிந்து விடும் என்று தேவர்கள் முறையிட்ட காரணத்தால் அதை உடனே பரமசிவன் எடுத்து தானே விழுங்க—

அது வயிற்றுக்குள் போனுல் பரமசிவனுக்கே ஆபத்து என்பதால் பார்வதி அவனுடைய தொண்டையைப் பிடித்து விஷத்தை அங்கேயே நிறுத்தி அப்படி நிறுத்தப் பட்ட காரணத்தால் பரமசிவனின் கழுத்திலே அது தங்கி ஒரு மூட்டு ஏற்பட்டு அதுதான் உலகத்திலே இருக்கிற ஆண்களுக்கெல்லாம் கழுத்திலே மூட்டு இருக்கிறது என்று புராணம் சொல்கிறதே; அப்பொழுது தோன்றிய அமிழ் தத்தை நான் சொல்லவில்லை. அமிழ்தம் எது என்று வள்ளுவர் வான் சிறப்பு என்ற அதிகாரத்திலே குறிப்பிடு கிறார்.

"வானின்று உலகம் வழங்க வருதலால்
தானமிழ்தம் என்றுணரற் பாற்று"

வானத்திலேயிருந்து உலகம் வாழ்வதற்காக வரு கிறதே மழை-அந்த மழைதான் அமிழ்தம் என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

இப்பொழுதுள்ள நிலைமையிலே மழை பொழிந்தால் தஞ்சைத் தரணியிலே உள்ள மக்களுக்கு அது அமிழ்த மாக இருக்காதா? அதைத்தான் 'தானமிழ்தம் என்றுணரற் பாற்று' என்றார்.

'வானின்று உலகம் வழங்க வருதலால் தானமிழ்தம் என்றுணரற்பாற்று'

மழை உழவனுக்கு அமிழ்தம். அந்த அமிழ்தமாக ஆகிறது குழந்தையினுடைய சிறுகை அளாவிய கூழ்!

இந்தப் பழங்காலப் பரம்பரைக்குப் பிறகு-ஒரு இடை வெளிக்கு அடுத்து எளிய நடையில் அதே நேரத்தில் எழுச்சி நடையில் மக்களுக்குத் தேவையான கருத்துக் களை அதிலும் இந்த மண்ணுக்கு அவசியப்பட்ட கருத்துக் களை எடுத்துச் சொல்லி-தலை நிமிர்ந்து பாடிய கவிச்

சக்ரவர்த்தி சுப்ரமணியபாரதியார்! அவருடைய மாணவர் கனகசுப்புரத்தினம்; பாரதியினுடையதாசன் என்று தன்னே விரும்பி அழைத்துக் கொண்டு பாரதிதாசனுக-பெயர் மாற்றம் செய்து கொண்ட கனகசுப்புரத்தினம்; அந்த சுப்ரமணியபாரதி தொடக்கத்திலே பக்திப் பாடல் களைத்தான் பாடினர். நான் எங்கேயோ போகிறேன் என்று தவருக எண்ணிக் கொள்ளாதீர்கள். (சிரிப்பு) பாரதி தாசன் கூட ஆரம்பத்திலே பாடிய பாடல்கள் சுப்ரமணிய துதி அழுது-கதர் பாட்டு போன்றவைகள்தான். ஆனல் அவருடைய கடைசி காலத்திலே பாடிய பாடல்கள் எல் லாம் வேகமான விருவிருப்பான புரட்சிக் காவியங்கள்

அதைப்போல பாரதியார் பக்திப் பாடல்களைப் பாடினர். தேச விடுதலைக்கான பாடல்களைப் பாடினர்.

"இமயமலை வீழ்ந்தது போல் வீழ்ந்தான் ஜார் அரசன்" என்கிற எழுச்சிப் பாடலை வரிகளாக ஆக்கித் தந்த அந்தப் பாரதி, பக்திப்பாடல்கள் பாடும் போதி லும் அதிலே இலக்கியச் சுவை எப்படிக் கொட்டியது என்பதை நான் இங்கே எடுத்துக் காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். முருகனைப் பற்றி ஒரு பாடல்! நாலே வரிகளில்! பாரதியாருடைய பாடல்! முருகனுடைய வேலைவணங்குவதைப் போல ஒரு பாட்டு, எவ்வளவு அழ காக அந்தப் பாடல் அமைக்கப்பட்டிருக்கிறது என்பதற் காக-எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

"தோகை மேல் உலவும் கந்தன்
சுடர்க் கரத்திற்கும் வெற்றி
வாகையே சுமக்கும் வேலை,
வணங்குவது எமக்கு வேலை!"

வேலை வணங்குவது எமக்கு வேலை என்று மிகச் சுருக்கமாக முருகனுடைய வேல்-வீரவேல் அதை வணங்குவது எமக்குவேலை என்று பாடிய அதே பாரதி—

"ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று தேடி
அலையும் அறிவிலிகாள்–பல்லாயிரம் வேதம் அறிவொன்றே
தெய்வ முண்டாமெனல் கேளீரோ?"

என்றும் பாடினர்.

ஆனல் தொகுத்தவர்கள் புத்திசாலித்தனமாக இவை களேயெல்லாம் முன்னுல் தொகுத்து விட்டு, அவனுடைய பக்திப் பாடல்களேயெல்லாம் பின்னுல் தொகுத்து பாரதி இத்தகைய உருவம் படைத்தவர் என்று உலகத்திற்கு காட்டியிருக்கக் கூடும். ஆனல் பாரதியைப் பொறுத்த வரையில் அவர் ஒரு சீர்திருத்த சிற்பியாக-ஒரு புரட்சிக் கவிஞனுக-வாழ்ந்தார்; பாடினர் என்பதற்கு எத்தனேயோ ஆதாரங்களே பாரதியின் பாடல்களிலே நாம் காண முடியும்.

பாரதி கேட்கிருரே—

"செத்தபிறகு சிவலோகம் வைகுந்தம்
சேர்ந்திடலாமென்றே எண்ணியிருப்பார்
பித்தமனிதர்! அவர் சொல்லும் சாத்திரம்
பேயுரையாம் என்றிங்கு ஊதேடா சங்கம்"

செத்தபிறகு, சிவலோகம் வைகுந்தம் சேர்ந்திடலாம் என்று எண்ணியிருப்பார் பித்த மனிதர்; நான் சொன்னுல் மன்னே சொன்னுல் உங்களுக்கு எவ்வளவு கோபம் வரும்? பாரதி சொல்கிருர். சொல்லவில்லே திட்டுகிருர். சிவலோகம் சேரலாம் என்று எண்ணுபவர் பித்த மனிதர்; அவர்களுடைய உரை பேய் உரை என்று மேலும் வசை பாடுகிருர். உண்மை அல்லவா?

நம்முடைய நாட்டில் இந்த பதவி மோகம் இருக் கிறதே சிலருடைய "லெட்டர் பேடை'ப் பார்த்தால் அவர்களுடைய பெயரை போட்டு முன்னுள் ஊராட்சி

மன்ற தலைவர்; முன்னாள் ஊராட்சி ஒன்றியத் தலைவர்; முன்னாள் எம். எல். ஏ; முன்னாள் அமைச்சர் இத்தனையையும் லெட்டர் பேடில் போட்டுவிட்டாலும் கூட அவர் இறந்த பிறகும்கூட விடுவதில்லை; இன்னர் சிவலோக பதவி அடைந்தார்; இன்னர் வைகுண்ட பதவி அடைந்தார்; அப்பொழுதும் பதவி ஆசை அவர்களை விட்டுப் போவதில்லை. அங்கேயும் பதவிதான்.

ஆக ஊராட்சி தலைவர் பதவியிலிருந்து வைகுண்ட பதவி வரையிலே பதவி-பதவி-பதவி!

அதைப் பார்த்துத்தான் ஆத்திரப்பட்ட பாரதி

"செத்தபிறகு சிவலோகம் வைகுந்தம்
சேர்ந்திடலாமென்றே எண்ணியிருப்பார்
பித்தமனிதர்! அவர் சொல்லும் சாத்திரம்
பேயுரையாம் என்றிங்கு ஊதேடா சங்கம்"

என்று பாடுகிறார்.

இன்னும் பாடுகிறார்.

"சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில் சாதல் கண்டும்
சிந்தை இரங்காரடி கிளியே செம்மை மறந்தாரடி!"

—காலையிலே செய்தி வரவில்லையா?

திம்புவிலே பேச்சு வார்த்தை! ஆனால் இலங்கை தீவினிலே தமிழ் இனத்தை முப்படைகளைக் கொண்டு படுகொலைக்கு ஆளாக்குகின்ற செயல் மீண்டும் தொடர்ந்து விட்டது என்று செய்தி வரவில்லையா?

இப்படிப்பட்ட செய்திகள் வருகிற நேரத்தில் தமிழ் நாட்டில் மக்கள் எழுச்சி பெற வேண்டும் என்பதற்காக தீர்க்கதரிசி போல அன்றைக்கே பாடி வைத்தார்-

"சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில் சாதல் கண்டும்
சிந்தை இரங்காரடி கிளியே செம்மை மறந்தாரடி!"

என்று அவர்களைப் பற்றி கவலைப்படாத தமிழர்களை அன்றைக்கே நொந்துகொண்டிருக்கின்றார்.

நம்முடைய சொந்த சகோதரர்கள் துன்பத்தில் சாகிறார்கள். அதற்காக நாம் சிந்தை கலங்க வேண்டும். வேதனைப்பட வேண்டும். அவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்று அன்றைக்கே பாடி வைத்தார்.

அவருடைய மாணவன் பாரதிதாசன், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் "எழுச்சியுற்ற பெண்" என்ற தலைப்பில் பெண்களைப் பற்றிப் பாடிய வரிகளை நினைவு படுத்துவதும் என்னுடைய கடமை.

ஏனென்றால் இந்த இலக்கிய வட்டத்தில் பெண் களுக்குத்தான் அதிக முக்கியத்துவம் என்று இங்கே பேசியவர்கள், மன்னை போன்றவர்கள் எல்லாம் எடுத் துச் சொன்னார்கள்.

ஒரு பெண்ணை ஒரு ஆடவன் அணுகுகிறான். ஏற் கனவே திருமணமானவன். அப்படி அணுகுகின்ற நேரத்தில் அந்தப் பெண் மறுக்கிறாள். நான் இன் னொருவனைக் காதலித்திருக்கிறேன். என்னை நெருங் காதே; என்று. ஆனால் அவன் விடவில்லை. நெருங்கு கிறான்; கையைப் பிடிக்கிறான்; உடனே அந்தப் பெண் தன்னுடைய வலது கையிலே ஒரு கத்தியைத் தூக்கி இடதுகையால் சுட்டிக்காட்டி ஓடிப்போ என்கிறாள். பெருமூச்சு வாங்க ஓடுகிறான். ஓடியவன் தன்னுடைய

நண்பனைச் சந்திக்கிறான்: விவரத்தைச் சொல்கிறான். ஒருபெண்ணை நெருங்கினேன். அவள் ஏற்கனவே ஒருவனைக் காதலிப்பதாகச் சொல்லி ஒரு உடைவாளை எடுத்து என்னுடைய உயிரைப் போக்குவதாக மிரட்டினாள்; ஓடிவந்தேன்; என்கிறான்.

நண்பன் நயமாக அவனிடம் சொல்கிறான்.

''செல்வப் பிள்ளாய்: இன்று புவியின் பெண்கள்
சிறுநிலையில் இருக்கவில்லை; விழித்துக் கொண்டார்!
கொல்ல வந்த வாளை நீ குறை சொல்லாதே:''

(அந்தப் பெண் உன்னைக் கொல்வதற்காக வாளை எடுத்தாளே, அந்த)

கொடுவாள் போல் மற்றொரு வாள் உன் மனைவி
மெல்லிடையில் நீ காணுக் காரணத்தால்
வினையாட நினைத்து விட்டாய் ஊர்ப் பெண்கள் மேல்

(அது போல ஒரு வாளை உன்னுடைய மனைவியின் மெல்லிடையிலே காணுத காரணத்தால்...அங்கேயும் நயம் பாருங்கள்...மெல்லிடை...வாளாம்...அந்தக் கொடுவாள் போல் மற்றொரு வாள் உன் மனைவியின் மெல்லிடையில் நீ காணுக் காரணத்தால் வினையாட நினைத்து விட்டாய் ஊர்ப் பெண்கள் மேல்)

பொல்லாத மானிடனே, மனச்சான்றுக்குள்
புகுந்து கொள்வாய்! நிற்காதே; என்றேன்; சென்றான்''

இது பெண்களுடைய எழுச்சியை வீரத்தைக் காட்டுவதற்கு புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் புனைந்த பாடல். பாட்டாளி வர்க்கத்திற்காக அவர் பாடுகிறார். எவ்வளவு உவமை நயத்தோடு பாடுகிறார்...

"ஊரிலேனும் நாட்டிலேனும்
உலகிலேனும் எண்ணினால்
நீர் நிறைந்த கடலே யொக்கும்
நேர் உழைப்பவர் தொகை!"

(ஊரில்—உலகத்தில்—நாட்டில் நாம் எண்ணிப் பார்த்தால் நீர் நிறைந்த கடலைப் போன்றது உழைப் பவர்களின் தொகை. ஆனல் அந்த உழைப்பை உறிஞ் சிக் கொழுக்கும் முதலாளிகளின் எண்ணிக்கை எவ் வளவு தெரியுமா?)

"நீர் மிதந்த ஓடமொக்கும்
நிறைமுதல் கொள்வோர் தொகை
நீரிற் சூறை மோதுமாயின்
தோணி ஓட்டம் மேவுமோ?"

கடலைப் போன்றது உழைப்பாளர்களின் எண் ணிக்கை. கடலில் செல்லும் படகுகளைப் போன்றது ஆதிக்கக்காரர்களுடைய எண்ணிக்கை. அந்த நீர் சூறை வந்து மோதுமேயானல் அந்தத் தோணிகள்— படகுகளின் ஓட்டம் மேவுமா? என்று தொழிலாளர் களின் புரட்சிச் சக்தியை புரட்சிக் கவிஞர் பாரதி தாசன் எடுத்துக் காட்டுகிறார்.

இவைகள் மாமேதை லெனின் கூறியதைப் போல மக்களுக்காக இயற்றப்பட்ட இலக்கியங்கள். மக்களு டைய முன்னேற்றத்திற்காக—எழுச்சிக்காக இயற்றப் பட்ட இலக்கியங்கள். லெனின் வெகு அழகாக கூறிய தாக மறைந்த அண்ணன் ஜீவானந்தம் அவர்கள் ஒரு இலக்கியவாதி என்ற முறையில் அவர் எழுதியுள்ள ஒரு கட்டுரையிலே குறிப்பிடுகிறார்.

"இலக்கியம் மக்களால் எட்டிப்பிடிக்கத் தக்கதாக இருக்க வேண்டும், என்று லெனின் கூறுகிறார். சர்வ

சாதாரண மக்களைக் கண்முன் நிறுத்தி எளிமையாகவும் இனிமையாகவும் கச்சிதமாகவும் இயற்றப்பட வேண்டு மென்கிறார். மக்களுக்குப் புரியாத பாண்டித்தியசெருக்கை லெனின் அடியோடு வெறுத்தார். பாட்டாளி வர்க்கத்துக் குரிய எளிய நடை என்கிற போது கொச்சை, பச்சையான போக்கில் விழுந்து விடுவதோ பண்படாத வாசகங்களின் தரத்துக்கு இறங்கி விடுவதோ அல்ல என்றும் லெனின் எச்சரிக்கை செய்தார்''

''ஜீவா என்றொரு மானுடன்'' என்ற நூலில் அண்ணன் ஜீவானந்தம் அவர்களுடைய கருத்து இவ்வாறு எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது.

இங்கே பேசியவர்கள் புதுக்கவிதைகள் பற்றிச் சொன்னார்கள். புதுக் கவிதைக்கு நாம் பகைவர்கள் அல்ல. அதே நேரத்தில் புதுக்கவிதை என்ற பெயரால் லெனின் குறிப்பிட்டதைப் போல கொச்சை, பச்சையான போக்கில் பண்படாத வாசகங்களின் தரத்திற்கு இறங்கி விடுவது கூடாது என்பது மிக முக்கியமாக கவிஞர்கள்-புதுக்கவிதை எழுதும் கவிஞர்கள் இதயத்திலே ஆழப் பதிய வைத்துக் கொள்ள வேண்டிய வாசகமாகும்.

நான் ஒரு கவிஞருடைய பெயரைச் சொல்ல விரும்ப வில்லை. அவர் எழுதியதாக ஒரு புதுக்கவிதை!

''சோஷலிசம் பேசும் சுகவாச மந்திரிகள்
படுக்கை அறையில் பாரத மாதாவை
நிர்வாணமாக நிறுத்தி வைத்துக்
கொக்கோக பாஷையில் கொஞ்சுகிறார்கள்''

சோஷலிசம் பேசும் மந்திரிகள் வெறும் உதட்டள வில் தான் உச்சரிக்கிறார்கள் என்று சொல்ல வேண்டிய கருத்தை எவ்வளவு கேவலமான முறையில் படுக்கை அறையிலே பாரத மாதாவை நிர்வாணமாக நிறுத்தி

வைத்து கொக்கோக பாஷையில் கொஞ்சுகிறார்கள்..... தேவைதானு இப்படிப்பட்ட கவிதைகள்?

"அதிகார வர்க்கத்தார் அன்னையின் மார்பைக்
கடித்தும் கொஞ்சியும் கசக்கியும், பார்க்கிறார்
பாஞ்சாலிக்குப் பின் இந்தப் பாரத மாதாவின்
படுக்கை படும்பாடு....."

இதெல்லாம் புதுக் கவிதையாம்?
பிறகு ராஜராஜனைப் பற்றி.....

"சிலையாகு மூன்னர் ஜீவித்திருந்த ராஜராஜன்
என்னத்தைச் செய்து கிழித்து விட்டானும்?"
"காலனி ஆதிக்கத் தொழுநோய்த் தேமலை
பூமியின் முகத்தில் எழுதிய புல்லனுக்கு
மக்களாட்சியா மகத்துவம் சேர்க்கும்?"
"மக்களாட்சியின் மகத்துவத்தைச் சிலையான பின்னும்
கற்பழிக்கின்றான் ராஜராஜன்"

புதுக்கவிதை என்ற பெயரால் இப்படியெல்லாம் எழுதலாமா என்பது தான் என்னுடைய கேள்வி.

ராஜராஜன் காலத்திலே காலனி ஆதிக்கம் இருந்த தாம். அதனால் கவிஞர் அவனை வசைபாடுகிறார்! ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் இன்றுள்ள சோஷலிச சமுதாயத்தைக் காண முடியுமா? ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் இன்றைக்கிருக்கின்ற குடியரசு தத்துவத்தை நாம் காண முடியுமா? ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் படையெடுத்துச் சென்று பல நாடுகளைப் பிடிப்பதே வீரம், என்றும் ஒரு மன்னனுக்கு உற்ற புகழ் என்றும் போற்றப் பட்ட காலத்தில் அந்த மக்கள் வாழ்ந்தார்கள்.

எனவே தான் புதுக்கவிதைகளை வரவேற்கும் அதே நேரத்தில் அந்தப் புதுக்கவிதைகள் தமிழ் இலக்கிய

பண்பாடுகளை அழிப்பவைகளாக-நோக்கங்களை குலைப் பவைகளாக இருந்துவிடக் கூடாது.

தஞ்சை மாவட்டத்தில் வருகின்ற வழியிலே கூட மன்னை அவர்கள் "இதுதான் கவி. கா. மு. ஷெரீப் அவர் கள் வாழ்ந்த வீடு; இது தான் கு.மா. பாலசுப்பிரமணியம் பிறந்த வீடு" என்றெல்லாம் காட்டிக் கொண்டு வந்தார். அந்த கு.மா. பாலசுப்பிரமணியம் ஒரு கவிதை நூல் எழுதியிருக்கிறார். அதில் ஒரு இடத்திலே குறிப்பிடுகிறார். நான் கவிதையைச் சொல்லவில்லை; அதன் பொருளை மாத்திரம் சொல்கிறேன்.

குழந்தை பிறக்கிறது; பிறந்த குழந்தை "இங்கா" என்று அழுகிறது. ஏன் "இங்கா" என்று அழுகிறது? என்று கேள்வி கேட்டுவிட்டு பதில் சொல்கிறார். "இங்கா பிறந்தேன்?" "இங்கா?" "இங்கா?" (கைதட்டல்) என்று கேள்வி கேட்கிறதாம்!...

அது புதுக்கவிதைதான். அப்படி அல்லவா புதுக் கவிதை இருக்க வேண்டும். கவிதைகளிலே கவிஞர் களுக்குள்ளே கூட போட்டி நடைபெற்றிருக்கின்றது. இன்றல்ல; பழைய காலத்திலே கூட;

மன்னனுடைய அவைக் களத்தில் புகழேந்தி புலவன் பாடும் போது "மல்லிகையே வெண்சங்காம் வண்டூத" என்று பாடுகிறானும்! மல்லிகையை வெண் சங்காகப் பாவித்து வண்டுகள் ஊதுகின்றன என்று பாடினானும்!

அவனுக்குப் பக்கத்திலே இருந்த ஒட்டக்கூத்தன் சொன்னான். பாட்டிலே பிழை என்றான். எப்படி என்று புகழேந்தி கேட்டான். மல்லிகை மலரை வெண் சங்காகக் கொண்டு வண்டு ஊதுவதாகச் சொல்கிறீர்; வண்டு மல்லிகையின் மேலே அல்லவா உட்கார்ந்திருக் கிறது. சங்கை பின்புறத்திலே அல்லவா ஊத வேண்டும்; எப்படி வாய் புறத்திலே ஊத முடியும் என்று கேட்கிறான்.

புகழேந்தி சொல்கிறான். வண்டு மது அருந்திய போதையில் இருக்கின்ற காரணத்தால் முன்பக்கம், பின்பக்கம் தெரியாமல் ஊதுகிறது என்று புகழேந்தி பதில் சொல்கிறான். இப்படிப்பட்ட போட்டியின் காரணமாக தமிழுக்கு சுவை ஏறுகிறது. அப்படிப்பட்ட சண்டைகள் இருக்கலாம்.

நான் ஆரம்பத்திலே சொன்னவாறு கவிதைக்கு ஒரு குறிக்கோள்-ஒரு நோக்கம்-ஒரு இலக்கு வேண்டும். காதலைப் பற்றி பாடுகின்ற காரணத்தால் அது இலக்கு இல்லை என்று பொருள் அல்ல. பாரதியே பாடியிருக்கின்றானே...

"நாடகத்தில், காவியத்தில், காதலென்றால்
நாட்டினர்தாம் வியப்பெய்தி நன்றும் என்பர்;
ஊடகத்தே வீட்டினுள்ளே, கிணற்றோரத்தே,
ஊரினிலே காதலென்றால் உறுமுகின்றார்;
பாடை கட்டி அதைக் கொல்ல வழி செய்கின்றார்;
பாரினிலே காதலெனும் பயிரை மாய்க்க
மூடரெலாம் பொருமையினால் விதிகள் செய்து
முறை தவறி இடரெய்தி கெடுகின்றாரே"

என்றான் பாரதி; இதிலே இலக்கு இல்லையா? நோக்கம் இல்லையா? அறிவுரை இல்லையா? காதலைத் தடுக்காதே என்கின்ற போதனை அதிலே பதிந்திருக்கவில்லையா? எனவே அப்படிப்பட்ட கவிதைகள் தேவை.

அதைப் போலவே பாரதிதாசன் கேட்கிறார்.

"சிற்றூரும் வரப்பெடுத்த வயலும், ஆறு
தேக்கிய நல் வாய்க்காலும், வகைப்படுத்தி
நெற்சேர உழுதுழுது பயன்விளைக்கும்
நிறையுழைப்புத் தோள்களெலாம் எவரின் தோள்கள்?
கற்பிளந்து மலைபிளந்து கனிகள் வெட்டிக்

கருவியெலாம் செய்து தந்த கைதான் யார்கை?
பொற்றுகளே கடல் முத்தை மணிக்கு லத்தைப்
போய்எடுக்க அடக்கியமூச் செவரின் மூச்சு?''

தொழிலாளிக்காக புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் இப்படி வாதாடவில்லையா? அந்தக் காலத்து விவசாயத் தொழிலாளர்களின் கூலியை ஞாபகம் வைத்துக் கொண்டு அப்போதே பாடினர்...

நடவுசெய்த தோழர் கூலி
நாலணுவை ஏற்பதும்
உடலுழைப்பி லாத செல்வர்
உலகைஆண் டுலாவலும்
கடவுளாணை என்றுரைத்த
கயவர் கூட்ட மீதிலே
கடவுள் என்ற கட்டறுத்து
தொழிலு ளாரை ஏவுவோம்.

என்று பாடவில்லையா?

புதியதோர் உலகு செய்வோம்; அதற்கு
பொது உடமை உலகென்று பெயர் வைப்போம்.

புரட்சிக் கவிஞன் பாரதிதாசன் பாடவில்லையா? அந்த வழியிலே தான் சங்க இலக்கியங்களைப் படித்து, திருக்குறளைப் படித்து, ஆய்ந்து-பாரதியாரின் எளியதமிழ் வழிநின்று-பாரதிதாசனின் எழிலார்தமிழ் வழி நின்று— என்னுல் இயன்ற அளவிற்கு நீங்கள் என்னை அளவிற்கு மீறி புகழ்ந்தாலும் கூட இன்னும் அந்தப் புகழுக்கு உரிய வனுக நான் ஆகவில்லை என்ற அடக்க உணர்ச்சியோடு கவிதைகள் சிலவற்றை நான் எழுதியது உண்டு. அப்படி எழுதியவைகள் சிலவற்றை இங்கே நம்முடைய மன்னை அவர்கள் நினைவுபடுத்தினர்கள்.

நான் எழுதிக் கொண்டு வருகின்ற குறுங்காவியத்தில் நற்கிள்ளி-நற்கண்ணை பற்றிக் குறிப்பிட்டார்கள். நான் அதிலே மிக முக்கியமான ஒரு பகுதியைக் குறிப்பிடுவார் என்று எதிர்பார்த்தேன். ஆனல் வயதான காரணத்தாலோ என்னவோ- அல்லது அந்த நேரத்தில் அவருடைய வீட்டாரும் வந்து கொண்டிருந்த காரணத்தாலோ- அதிலே உள்ள காதல் பகுதியையே படித்துக் காட்டினர். (சிரிப்பு)

காதலுக்காக ஏங்குகின்ற ஒரு கன்னியை- நற்கண்ணையை- அவளுடைய தாய் தடுக்கிருள். தாய் தடுக்கின்ருளே என்று நற்கண்ணை ஏங்குகிருள்; துடிக்கிருள்; பதைக்கிருள்.

அப்போது தோழி சொல்கிருள். தாய் தடுக்கிருள் என்று நீ ஆத்திரப்படுவது முறையல்ல; எந்தத் தாய் என்பதை மறந்து விடாதே; அந்தத் தாயைக் கோபித்துக் கொள்ளாதே; தாய் காரணம் இல்லாமல் தடுக்க மாட்டாள்; எப்படிப்பட்ட தாய்? என்று தாயின் மேன்மையை அந்தப் பெண்ணிடத்தில் அந்தத் தோழி சொல்கிருள்.

"ஆய்ந்து பார் ஆரணங்கே!
காய்ந்து சினந்து கடிந்து கொண்டாலும் அன்னை,
தேய்ந்திடு நிலவாய் நின்காதல் ஆகாதிருக்கவே
எச்சரிக்கின்ருள் உன்னை!
வளர் பிறையாய் உம் காதல் வளர்ந்து
குளிர் நிலவாய் அமுதமழை பொழிந்தால்
குலமகளே! உலை வாழ்த்தாமல்
உன் தாயின் மனமென்ன;
நிலமகழ்ந்து எடுத்திட்ட
இரும்பாகப் போமோ?
கருவுற்ற காலத்தில் அவள் நாவினைக்
கசப்பாக்கித் தொல்லை தந்த போது
திருவுற்ற அந்தத் தாய்

புளிப்பாலே கசப்பு போக்கி — உன்
புன்னகை காணத் தவமிருந்தாள்!
ஆலின் இலை போன்ற அவள் அழகு வயிற்றை—ஒரு
சாலின் வடிவாக்கி நீ அலங்கோலம் தந்தபோதும்,
உன் கோலம் காண்பதற்கே — அவள்
உயிர் வாழ்ந்து கொண்டிருந்தாள்!
மணி வயிற்றுக்குள்ளிருந்து நீ
மாறி மாறி உதைத்த போதும்,
வலி பொறுத்துக் கொண்டபடி
அணியென்ன பூட்டலாம் அந்தக் காலுக்கென்று
ஆயிரம் சிந்தனை செய்திருந்தாள்!
ஊதையில் துரும்பெனத் தாயுடல் அலைக்கழித்து
உலகில் நீ பிறந்துருண்டு அழுதபோது - இன்ப
போதையில் துன்பமெலாம் மறந்திருந்தாள்!
இன்றவள், உன்
பாதையில் பாடம் சொல்லல் ஒரு பாபமா?
பூவைத்துப் பொட்டிட்டு முத்தமாரி பெய்தபோது — நீ,
பூவையாய் ஆவது எப்போதென்று ஆண்டெண்ணிக்
கிடந்த அன்னை;
கோவையாய்ச் சிவந்த உன் இதழைக் கிளியொன்று
கொத்துமென்று தெரியாத பேதையா என்ன?
ஆற்றில் இறங்கிக் குளிக்கத் தடைகூறவில்லை அன்னை!
ஆழம் தெரிந்து இறங்கென்று கூறுகின்றாள் அவ்வளவே!
அதற்குள் நீ அவன் வருமட்டும் வழிபார்த்துக் காத்திருந்து
அல்லும் பகலும் உறக்கமின்றி வாடி வதங்கி,
உடலைக் கெடுத்துக் கொள்கின்றேன் என்றாள்;
உனை உயிராக நினைக்கின்ற பெற்றோர் ஒப்புவரோ?
உன் தோழி கெஞ்சுகின்றேன்; உடனே கேள்!

உறங்கி எழு! உற்சாகமாக இரு!
உறையூர் எங்கும் ஓடிவிடாது — உன்
அறையூரில் அடங்கத் தான் போகிறது''
என்றுரைத்துச் சிரித்தாள் தோழி!

இது அன்னையின் பெருமையையும்; வளர்ந்து வருகின்ற பெண்கள் அன்னையின் அருமையை உணர்ந்து தங்களுடைய வாழ்க்கையை வகுத்துக்கொள்ள அந்த அறிவுரையையும் பெறவேண்டும் என்கிற எண்ணத் தோடு—அந்த இலக்கோடு நான் சித்தரித்த இலக்கியம்.

வருகின்ற வழியெல்லாம் மன்னை என்னை குடைந்து கொண்டே வந்தார். நான் பொதுப்பணித்துறை அமைச் சராக இருந்தபோது குடந்தையிலே கவி அரங்கம் ஒன்றில் ஆறுகளை எல்லாம் இணைத்து நான் பாடிய பாடலை இங்கே ஒரு முறை என் வாயால் பாடவேண்டுமென்று சொன்னார். அதை இப்போது நான் இங்கே கூறு கிறேன்.

வீட்டோரம் காட்டோரம் தேர்தல்
ஓட்டோரம் இருக்கும் நல்லீர்—சிறிது
ஆற்றோரம் பாரீர்; இன்று என்
பாட்டோரம் வாரீர் நன்று!

குடமுருட்டிக் காவிரிப் பெண் ஆடுகின்ற காட்சி கண்டு-காதல் கொள் இடம் இது தான் என்று : காதல்
கொள்ளிடம் இதுதான் என்று
வீரசோழன் வருகின்றான் ஓடம் போக்கி! என்மேல்
வை கை என்று வளைக்கின்றான்
வைகை என்று வளைக்கின்றான் உன் பல்
மணி முத்தா என நெளிகின்றான்
காவிரியோ கண் சிமிட்டி, என்

மன்னியார் வருகின்ருள்;
மறைந்திடுக அத்தான் என்கின்ருள்; அவனே
வரட்டுமே மன்னியார், நம்
காதலுக்கு அவளென்ன கல்லணையா?
காமினி பாமினி நாமினி காதலர்கள்
ஆம் இனி திருமணமென்று பிறருக்குச் சொல்லிவிடு.
காதல் அக்கினியாறுமோ கண்ணே அருகில் வந்து விடு!
என்ருன்.
அவளோ
யாரும் நம்மீது தப் பெண்ணுர் நம்
காதல் பிரிக்க வெண்ணுர் பிறர்
வெட்டார் நம் உறவெனினும் அத்தான்
வெட்கம் என்னைத் தடுக்குதென்ருள்
வீரசோழன் விரைந்த ணைத்துக் கொண்டவாறு
பாலாறும் முன்னே பருகிடுவோம் வா என்ருன்
மஞ்சளார் முகவதியும் அவன் மடிமீது சாய்ந்தபடி
மனமெப்போது அத்தான் என்ருள்
பெரியாறு தலைமையிலே பெரிதாக நடக்குமென்ருன்''

அதைப்போலவே காவேரியின் பிரச்சினை பற்றியும் உள்ள நான்கைந்து வரிகளைப் பாடவேண்டுமென்று சொன்னுர்.

குடகுமலை உச்சியிலே கோலங்காட்டி
அழகுமகள் காவிரியும் ஆடவந்தாள்
ஆடவந்த ஆரணங்கை அடைவதற்கு
ஓடிவந்த கர்நாடகத்தான் ''அணை'' என்ருன்; அவன்
கையணையைத் தாண்டிக் கல்லணைக்குள் நுழைந்து—தன்
கற்புநெறி காப்பதற்குத் தஞ்சைக்குத் தாவி வந்தாள்
பூம்பாவை காவிரியின் புகார் கேட்டுச் சோழமன்னன்

பூம்புகாரின் கடல் அலையைக் கணவனுய் ஆக்கிக்
காத்தான்
பிறந்த வீட்டை மறந்திடாமல்—என்றும்
புகுந்த வீட்டு வளம் பெருக வாழ்வதுதான்
பெண்மணிக்குப் பெருமையென்றுல்—நம்
கண்மணியாம் காவிரிக்கும் அது பொருத்தம்தானே?

இது அப்போது நான் முதலமைச்சராக இருந்தபோது பாடிய பாடல். இன்றைய முதலமைச்சரும் இந்தப் பாட்டை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். அவர் பாடாவிட்டாலும் மனதில் பதிய வைத்துக்கொள்ள வேண்டும்.

தமிழகம் வளம்பெற காவேரியின் தயவு எவ்வளவு தேவை என்பதையும் அதற்காக நாம் நடத்த வேண்டிய வாதம், போராட்டம் எவ்வளவு என்பதையும் அதன் காரணமாக தஞ்சை செழிக்க வேண்டும் என்பதையும் மனதில் கொள்ள வேண்டும். செழிப்பு இருந்தால் தான், வளம் இருந்தால்தான் இலக்கியம் எல்லாம். இப்படி நிம்மதியாக உட்கார்ந்து மாலை நேரத்தில் மந்த காசமாக மந்தமாருதம் வீசுகின்ற நேரத்தில் மன்னையம் பதியிலே இலக்கிய விழாவை நாம் சுவைத்துக் கொண்டி ருக்கிறேமென்றுல் வளம் இருந்தால்தான்! வறட்சியும் வறு மையும் இன்னும் மென்மேலும் அதிகரித்துக் கொண்டே போகுமானுல் பிறகு இலக்கியம் எங்கே? இல்லை. அதைப் பற்றி சிந்தனை எங்கே? இல்லை. இவைகள் எல்லாம் இல்லா மல் போய்விடும். இலக்கியம் செழிக்க, காப்பியங்கள் செழிக்க, கவி வளம் பெருக, வாழ்க்கை நிம்மதியாக

அமைதியானதாக அமைய வேண்டும். அது எல்லோருக்கும் உரிய வாழ்க்கையாக அமைய வேண்டும். அப்படிப்பட்ட வாழ்க்கை அமைய நாம் எதிர்காலத்தில் நடத்த வேண்டிய போராட்டங்கள் ஏராளம் இருக்கின்றன. அந்தப் போராட்டத்திற்கான இலக்கியங்களை யும் உருவாக்க வேண்டும்! அந்த இலக்கியங்கள் புரட்சிப் பூக்களாக மலர வேண்டும்! இத்தகைய கருத் தோட்டத்தைப் பெற இந்த இலக்கிய விழாக்கள் பயன் பட வேண்டுமெனக்கூறி என் உரையை நிறைவு செய்கின்றேன்.

□ □ □

திரு. து. ப. நடனம் அறிக்கை

இலக்கிய வட்டம் இன்று இரண்டு நிகழ்ச்சிகளை இரத்து செய்துள்ளது. ஒன்று அறிமுக உரை. சென்னையிலிருந்து நமது இலக்கிய வட்டத்திற்கு வருகை தரும் எழுத்தாளர்களை, பத்திரிகையாளர்களை பேருந்து நிலையத்திலிருந்து நம் வீட்டிற்கு வருவதற்குள் அவர்களது வாழ்க்கை வரலாற்றை அவர்களிடமிருந்தே தெரிந்து கொண்டு எமது செயலாளரோ அல்லது நானே அறிமுக உரையாற்றுவோம். இன்று அது தேவையில்லை. அதுவும் மன்னை மக்களுக்கு கலைஞரை அறிமுகப்படுத்த அறவே தேவையில்லை. கலைஞரின் வாழ்க்கை ஒரு திறந்த புத்தகம். தமிழகத்திலும் கடல் கடந்தும் பாரதத்திலும் தெரிந்து வைத்திருக்கிற ஒரு பெயரை அறிமுகம் என்பதன் பெயரால் கூறுவது இங்கே பேசுகிற எங்களுக்கு வேண்டுமானால் உங்கள் மத்தியில் ஒரு அறிமுகத்தை தரக்கூடும். எனவேதான் அறிமுக உரை ரத்து செய்யப்பட்டது. அடுத்து, இலக்கிய வட்டத்தின் கேள்வி பதில் நிகழ்ச்சியும் ரத்து செய்யப்படுகிறது.

கலைஞர் அவர்களே உங்களிடம் ஒரே ஒரு வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன். நீங்கள் இலக்கிய கூட்டங்களில் அதிகம் கலந்து கொள்ள வேண்டும். மன்னை இலக்கிய வட்டம் தன் மரக் கதவுகளை மட்டுமல்ல மனக்கதவுகளையும் உங்களுக்கு திறந்தே வைத்திருக்கும். தங்கள் ஓய்வறியாத உழைப்பின்போது தஞ்சை மாவட்டத்தைக் கடக்கும்போதெல்லாம் நீங்கள் இங்கே வரவேண்டும். உங்களுக்கு ஒரு சோக நினைவை உண்டு பண்ணுவதற்காக மன்னியுங்கள்.

தங்களை ஈன்று எடுத்த அன்னையார் காலமான போது பத்திரிகையாளர்கள் உங்கள் முகம் பார்த்து நின்றார்கள். அப்போது நீங்கள் சொன்னீர்கள்:

"கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் குளிர் தருவை– தரு நிழலை நான் இழந்து தவிக்கிறேன்" என்று கூறினீர்கள்.

மன்னை இலக்கிய வட்டம் உங்களுக்கு உங்கள் அரசியல் வெப்பக்கோடையில் குளிர் தருவாய்—தரு நிழலாய் இருக்கும்; உங்கள் தாயின் மடிமீது தலைவைத்து தாங்கள் படுத்துறங்கிய அந்த நாளின் சுகத்தை எங்கள் இலக்கிய வட்டம் உங்களுக்கு அளிக்கும் என்பதை என் நாவின் நுனியினுல் அல்ல உதட்டின் நுனியினுல் அல்ல என் நெஞ்சத்தின் ஆழத்திலிருந்து தெரிவிக்கிறேன். முன்பு ஒரு முறை நீங்கள் 48மணி நேரங்கள் சென்னையில் காணுமல் போய்விட்டீர்கள். உங்கள் அண்ணு, உங்களைப் பார்த்து "எங்கே போயிருந்தாய்" என்று கேட்டார்? நீங்கள் சொன்னீர்கள் 'அண்ணு சென்னை— அன்னை — மன்னை' என்றீர்கள். உங்கள் தாயாரின் கல்லறையின் மீது நீங்கள் மலர் வளையம் வைத்து வணங்கியபோது உங்கள் மனம் கனத்திருக்கும். அந்தக் கனத்த நெஞ்சத்தை இலேசாக்கிக்கொள்ள நீங்கள் வந்த இடம் இந்த மன்னை. இங்கே மன்னை மற்றும் நண்பர்களிடம் நீங்கள் பேசிச் சிரித்து மகிழ்ந்து மீண்டும் கடமையாற்ற சென்னை சென்றீர்கள். அந்த நிறைவுடன் உரிமையுடன் உங்களை இந்த இலக்கிய வட்டத்திற்கு அன்புடன் அழைக்கிறேம்.

□□□□

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்